Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

மலர் IV.] 1943-ம௵ அக்டோபர்மீ 1௳, வெள்ளிக்கிழமை [இதழ் 5

தடுக்க முடியாத ஆதிக்கம்

☆

கர்னல் நாக்ஸ்.

“பசிபிக் யுத்தம் முக்கியமாக கப்பற் படை யுத்தம். இது மிகப் பெரியது. ஆதிக்கம் மிகுந்தவர்களோடு நடை பெறுவது. அவர்களுக்கு பசிபிக் சமுத்திரத்தின் மூலை முடுக்குக ளெல்லாம் நன்ருகத் தெரியும். மகா கொடூரமானவர்கள். மகா பிடிவாதமாகப் போராடும் குணமுடையவர்கள். சாகிற வரையிலுங் கூடப் போராடத் தயாரா யிருப்பவர்கள். பிரிட்டன், அத்லாண்டிக் கடலில் நீர் மூழ்கிகளோடு போராடியது. அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் பசிபிக் சமுத்திரத்தில் நீர் மூழ்கிகளோடு போராடுகிறது. ‘பெர்ல்’ துறை முகம் கைப்பற்றப்பட்டது முதல், ஜப்பானியர்களுக்கு மொத்தமாக உள்ள எல்லாக் கப்பல்களையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால், அவற்றில் மூன்றில் ஒரு பங்கு கப்பல்கள் இப்போது மூழ்கடிக்கப்பட்டு விட்டன.”

“இப்போது எல்லாக் கடல்களிலும் தடுக்க முடியாத ஆதிக்கம் பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் ஏற்பட்டிருக்கிறது.. அதற் கேற்ருற் போலவே, விமான ஆதிக்கமும் ஏற்பட்டிருக்கிறது. உலக விவகாரங்களில் மிகுந்த ஆதிக்கம் செலுத்துவதற்கு இவை மிகவும் அவசியம்.”

கர்னல் நாக்ஸ், அமெரிக்கக் கப்பற் படை மந்திரி
செப்டெம்பர் 24-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.
படம்: கர்னல் நாக்ஸ்	1
தடுக்க முடியாத ஆதிக்கம்	1
முரசொலி	2
தலையங்கம்: ருஷ்யர்கள் வெற்றி வரிசை ..	3
போர்முனை நிகழ்ச்சி விளக்கம் ..	4
பழைய குறைகளையும் சந்தேகங்களையும் பேசிப் பயனென்ன?	5
விலைகளை உயர்த்துவதும் குறைப்பதும் பொது மக்களே	6
படைகளுக்கு ஆட் சேர்த்தலும் யுத்த முயற்சியும்	7
"உழுதூண் விரும்பு"	8
யுத்த காலத்தில் அரசாங்க உதவி	9
மீட்சிக்கு வழி	9
திமிர் பிடித்த பேச்சு!	10
அங்கும் இங்கும்	11
யுத்த நாட் குறிப்புக்கள்	13

முரசொலி

அச்சு நாடுகளுடன் ஸ்பெய்னும் அர்ஜெண்டினாவும் கொண்டுள்ள உறவை ரத்து செய்து விடும்படி மிஸ்டர் ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் தூண்ட வேண்டும். நேச தேசங்களுடன் அவை சேர வேண்டும்; அல்லது அவற்றை எதிர்க்க வேண்டும். ஸ்பெய்ன் நேச நாட்டினரோடு சேரா விட்டால், அதன் கதி என்னாகும் என்று சிந்தித்துப் பார்க்கும்படி ஸ்பெய்னுக்கு மிஸ்டர் சர்ச்சில் எடுத்துச் சொல்ல வேண்டும்; அது போலவே, ரூஸ்வெல்டும் அர்ஜெண்டினாவுக்குத் தெரிவிக்க வேண்டும்.

—மிஸ்டர் லாகார்டியா, நியூயார்க் நகர மேயர்
செப்டம்பர் 27-ம் தேதி கூறியது.

* * * * * *

1944-ம் வருஷத்தில் ஏற்றுமதியாகக் கூடிய யுத்த சம்பந்தமான பொருள்களில் 100-க்கு 10 விகிதம், பிரான்சு, பெல்ஜியம், நார்வே, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டு மென்று திட்டமிடப் பட்டிருக்கிறது. அடுத்த வருஷத்தில் குத்தகைக் கடன் திட்டப்படி நேச நாடுகளுக்கு 540 கோடி டாலர்கள் பெறுமானமுள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும். இவற்றுள் பெரும் பகுதி, பிரிட்டன், ருஷ்யா, சீனா ஆகிய நாடுகள் தான் அடையும்.

—லெப்டினென்ட் கர்னல் காட், அமெரிக்க தரைப்படை உதவி
டைரக்டர் செப்டம்பர் 28-ம் தேதி கூறியது.

* * * * * *

"இந்திய வைசிராயாக இப்போது நியமிக்கப் பட்டிருக்கும் தலை சிறந்த படைத் தலைவருடைய தலைமையில் உங்களுடைய ஒப்பற்ற வீரத்தோடும், நேச நாடுகளிடம் கொண்டிருக்கும் பிறழாத பக்தியினாலும் தான், வெற்றி பெறத்தக்க நிலையில் நேச நாடுகள் இருக்கின்றன. இந்திய வீரர்களாகிய உங்களுக்கு நேச நாடுகள் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றன. நீங்கள் இந்தப் புதிய யுத்த முறையில் தலை சிறந்து விளங்குகிறீர்கள். நம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கண்ணியத்தை நிலை நாட்டி விட்டீர்கள்."

"கிழக்குப் போரரங்கத்தில் ஜப்பானிய பூதம் உங்கள் சொந்த நாட்டைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியப் படைகள் இங்கேயும் பல வெற்றிகள் பெற்று ஜப்பானியர்களின் பேராசையையும் கொடுமையையும் அடியோடு அழிக்கும்."

—மாஞ்செஸ்டர் நகர லார்ட் மேயர், செப்டெம்பர் 28-ம் தேதி கூறியது.

* * * * * *

"4-வது இந்தியப் படையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பிரிட்டிஷாரா யிருந்தாலும் சரி, இந்தியராயிருந்தாலும் சரி, சிறந்த நேச உணர்ச்சியினால் தூண்டப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேசம் ஒரே இனத்தாரிடம் கூடக் காண்பது அரிது. தம் கடமையை நிறைவேற்றுவதில் ஒரு இந்திய சிப்பாய் மிகவும் உணர்ச்சியோடு வேலை செய்கிறார்; அது போலவே, அந்தப் படையின் உத்தியோகஸ்தர்களுக்கும் தம் சிப்பாய்களிடத்தில் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது."

—மேஜர் ஜெனரல் டகெர், 4-வது இந்திய டிவிஷன் படைத்தலைவர், செப்டெம்பர்
27-ம் தேதி வானொலிப் பிரசங்கம் செய்த போது குறிப்பிட்டது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV] 1943-ம் ௵ அக்டோபர் ௴ 1௳. [இதழ் 5

ரஷ்யர்கள் வெற்றி வரிசை

கண்ணுக்குப் பச்சென்றிருந்தால் யாருக்கும் நாவில் ஊற்றெடுக்கத் தான் செய்யும் என்பார்கள். ரஷ்யா வளம் மிகுந்த நாடு. இது கண்டு மற்ற நாடுகள் பொறாமை கொள்ளுகின்றன. அதைக் கவர முயற்சிக்கின்றன. 131 -வருஷங்களுக்கு முன்னேயே நெப்போலியன் முயற்சித்தார். முதலில் பல வெற்றிகள் பெற்றார். மாஸ்கோ நகரத்தையுங் கூட நெருங்கினார். கடைசியாக அவர் பின்வாங்கும்படி நேர்ந்தது. ஆனால் அவருடைய ஆதிக்கமே அழிந்தது. இரண்டு வருஷங்களுக்கு முன்பும் ஹிட்லர் கிளம்பினார். ரஷ்யாவைத் தாக்கினார். இது ஒரு மகத்தான தாக்குதல். வெற்றிமேல் வெற்றி அவருக்குக் கிடைத்தது. மாஸ்கோ, ஸ்டாலின்கிராட் நகரங்களின் தலைவாசல் வரையிலும் கூடச் சென்று விட்டார். அன்றியும், காக்கசஸ் பகுதியையும் கைப்பற்றிக் கொண்டார். இதுதான் மகா செழிப்பான பகுதி. ஏராளமான கோதுமை விளைகிறது. சுரங்கங்களும் வெகு அதிகம். ஆகவே, அது ஒரு கைத்தொழிற் பகுதியாகவும் விவசாயப் பகுதியாகவும் விளங்கியது.

இனி வரப்போவது மழைக் காலம். இதை நினைக்கிற போதே ஜெர்மன் படைகள் நடுங்குகின்றன. எனவே பின் வாங்குகின்றன. ஸ்டாலின்கிராடையும் காகஸஸையும் உக்ரேனின் ஒரு பகுதியையுங் கூட அவை இழந்து விட்டன. இப்போது நீப்பர் ஆற்றில் ஸ்மாலென்ஸ்கிலிருந்து அந்த ஆற்றின் பெருவணை வரை பரவியிருக்கிறார்கள். அன்றியும், காகஸசிலிருந்து நெப்ரோபெட்ரோப்ஸ்க் வரையிலும், ஸ்டாலின்கிராடிலிருந்து கியேவ் வரையிலும் சுமார் 600 மைல் தூரம் அவர்கள் விரட்டப்பட்டனர். பலமுறை படுதோல்விகளடைந்த செம்படைகள் சாதித்த மகத்தான செயல்களில், இவையும் சில. இதுவரை தோற்றுக் கொண்டிருந்த செம்படைகள், திடீரென்று தலை சிறந்த வெற்றிகள் பெறுவதற்குக் காரணங்கள் என்னவென்று இங்கே ஆராய்வது பொருத்தமாகும்.

முதலாவது ரஷ்யாவிற்கு ஆள் பலம் மிகவும் அதிகம். இப்போது செம்படைகளில் 300 டிவிஷன்கள் அதாவது 50 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஆயுத பலமில்லாமல் ஆள் பல மட்டுமிருந்தால் போதுமா ? ஆகவே ஊரல் பகுதியிலும் சைபீரியாவிலும் மார்ஷல் ஸ்டாலின் தன் தளவாட உற்பத்தி ஏற்பாடுகளைச் செய்துவைத்திருந்தார். உக்ரேனை இழந்த பிறகுங்கூட, தன் ஏராளமான படைகளுக்கு வேண்டிய தளவாடங்களை நேசநாட்டினர் உதவியைக்கொண்டு தேடிக் கொடுத்தார். ஆள்பலமும் ஆயுத பலமும் மட்டுமிருந்தால் போதுமா ? இராணுவத் திறமையும் வேண்டும். இந்த யுத்தத்தில் ரஷ்யர்கள் அனுபவித்த பெருங் கஷ்டங்களைக் கொண்டு, தற்காலம் போர்த் திறமையில் மகா வல்லவர்களாகி விட்டனர். டாங்கிப் படையும் விமானப் படையும் ஜெர்மானியரோடு சமமான அளவிற்கு இருந்த போதிலும், பீரங்கிப் படையில் ரஷ்யர்கள் மேம்பட்டிருந்தனர்.

நெப்போலியன் போராடிய காலத்தில் ஸ்பெய்ன் எப்படி ரஷ்யாவிற்கு உதவி செய்ததோ, அதுபோலவே இப்போது நேசநாடுகள் ஹிட்லரோடு போராடுவதற்கு, இத்தாலி உதவி செய்கிறது.

சென்ற வாரத்தில் ஹிட்லரின் மூன்று முக்கியமான கோட்டைகளான ஸ்மாலென்ஸ்க், கியோவ், நீப்ரோபெட்ரோப்ஸ்க் ஆகியவற்றை செம்படைகள் யணுகிக் கொண்டிருந்தன. இப்போது இந்த மூன்று நகரங்களில் ஸ்மாலென்ஸ்க்கை மட்டும் கைப்பற்றிவிட்டன. ஸ்மாலென்ஸ்க் நீப்பர் ஆற்றின் வட பகுதியிலும், கியேவ் மத்திய பகுதியிலும், நீப்ரேபெட்ரோப்ஸ்க் தென் பகுதியிலுமிருக்கின்றன. ஸ்மாலென்ஸ்க நகரத்தை ரஷ்யர்கள் மீட்டது முதல், ஜெர்மானியர்கள் பெரிதும் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். தம்மை ரஷ்யப் படைகள் சூழ்ந்து கொண்டு விடுமென்று பெரிதும் பயந்தார்கள். ஸ்மாலென்ஸ்க் நகரத்தை ரஷ்யர்கள் கைப்பற்றியது ஒரு சிறந்த யுத்த தந்திரம். நெப்போலியன் மாஸ்கோவிற்குப் படையெடுத்துப் போன பாதையில் டுகோப்ஸ்சைனா, யார்ட்சிவோ என்னும் இரண்டு இடங்களிருக்கின்றன. இவ்விரண்டையும் நேசநாட்டுப் படைகள் தாக்கின. நான்கு நாட்கள் கடும் போராடின. பிறகு அவை கைப்பற்றப்பட்டன. உடனே அந்நகரத்தின் வட திசையிலும் தென் திசையிலும் பரவின. வட திசையில் பரவிய படையின் தலைவர் ஜெனரல் ஓரமங்கோ. இந்தப் படை வேலிழ் நகரத்தைச் சாம்பலாக்கி ட்வேனா பள்ளத்தாக்கு வழியாக விடெஸ்கு என்னுமிடத்திற்குப் போய்ச் சேர்ந்தது. இது ஸ்மாலென்ஸ்குக்குப் பின்புரமிருக்கிறது. அதே சமயத்தில் தெற்கு நோக்கிப் போன படைகள் ஜெனரல் சொகொலோப்ஸ்கி தலைமையில், ஸ்மாலென்ஸ்க்குக்கும் வேலிழுக்கும் இடையே புகுந்து தாக்கின. எல்னியாவிலிருந்தும் சோவியத் படைகள் ஸ்மாலென்ஸ்க் நகரத்தின் தென் கிழக்குப் பகுதியைத் தாக்கின. இரண்டு புறங்களிலும் தாக்கப்படுவதை விட, பின்வாங்கி விடுவதே மேல் என்று ஜெர்மன் படைத்தலைவர் நினைத்திருக்க வேண்டும். எனவே, ஸ்மாலென்ஸ்க், ரோஸ்லாப்ல் ஆகிய இரண்டு நகரங்களையும் காலி செய்து விட்டனர். ஸ்மாலென்ஸ்க் நகரத்தை இழந்தது, ஜெர்மானியர்களுக்கு மகத்தானதோர் நஷ்டம். மாஸ்கோ முற்றுகை காலத்தில் ஹிட்லர் தன் தலைமை காரியாலயத்தை இங்கே தான் அமைத்திருந்தார். மத்திய ரஷ்யாவில் ஜெர்மானியர்களின் முக்கியமான 'சப்ளை' தளமாக அது விளங்கியது. போலந்தின் எல்லைப்புரத்திலுள்ள மின்ஸ்க் நகரம் இதற்கு 150 மைல் தூரத்திலிருக்கிறது. சில இடங்களில் நீப்பர் ஆற்றைக் கடக்க ஜெர்மனியர்கள் முயற்சிக்கிறார்கள். நீப்பர் ஆற்றங் கரையிலுள்ள கியேவ் நகரத்தைக் கைப்பற்றுவது கஷ்டம் என்று சொல்லப்பட்டது. ஆனால் நிப்ரோபெட்ரோப்ஸ்கு வீழ்ந்தது.

மழைகாலம் தமக்குச் சாதகமா யிருக்குமென்ற எண்ணத் தோடு ஜெர்மானியர்கள் நீப்பர் ஆற்றுப் பகுதியைப் பாதுகாக்க முயற்சிப்பார்களா ? அவர்களுடைய நிலைமை அங்கே திருப்திகரமாயில்லை. கியேவிலிருந்து நிப்ரோபெட்ரோப்ஸ்க் வரை, ரஷ்யப் படைகள் இருப்பதனால், நீப்பர் நதிக் கரையில் ஜெர்மன் படைகளை எளிதில் வென்று விடக் கூடும். ஹிட்லர் மேலும் பின்வாங்கி, பக் ஆறு, நீஸ்டர் ஆறு ஆகியவை பக்கம் போய்த் தம் போர் முனையின் அளவைக் குறுக்கிக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதானால் ஜெர்மானியர்கள் க்ரிமியாவை இழக்கும்படி நேரும். அங்குள்ள செபெஸ்டபோல் என்னும் கப்பல் படைத் தளத்தைப் பிடிப்பதற்கு, ஜெர்மானியர்கள் முன்பு பெரும் நஷ்டப்பட்டார்கள். அன்றியும் கிரிமியாவை ஜெர்மனி இழந்து விட்டால், ருமேனியத் துறைமுகங்களை, கருங்கடலிலுள்ள சோவியத் கப்பற்படை இலகுவில் தாக்கக்

கூடும். ருமேனியாவிலுள்ள எண்ணெய்க் கிணறுகள் மீது சோவியத் விமானங்கள் வந்து வெடி குண்டுகளால் தாக்கும். நீப்பர் ஆற்றின் தென் பகுதியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டு மென்று ஹிட்லர் பெரிதும் முயற்சிக்கலாம். ஆனால், அதற்கு அவரிடம் ஆற்றல் உண்டா ? இது ஒரு முக்கியமான பிரச்சினை. காகஸஸிலுள்ள அவருடைய கடைசி கேந்திர ஸ்தானம், தாமன் தீபகற்பம். அங்குள்ள தன் படைகளையும் அவர் தருவித்துக் கொள்ளப் பார்க்கிறார். இப்படி இவர் தருவித்துக் கொண்டாரானால், கிரிமியாவைக் காப்பாற்றுவது சற்று கஷ்டமா யிருக்கலாம்.

தகுந்த இருப்புப் படைகளை ஹிட்லர் வைத்திருந்தால் தவிர, அவர் இந்தப் போராட்டத்தைத் தாங்க முடியாது. மேற்கு போர்முனைக்கு அனுப்ப போதுமான படைகள் இல்லாததனால் தான், பின்வாங்க நேர்ந்த தென்று சமீபத்தில் ஜெர்மன் அதிகாரி ஒருவர் கூறியதைக் கொண்டு இந்த நிலைமையைப் பரிசீலனை செய்தால், நிலைமை ஜெர்மானியர்களுக்கு மிகவும் மோசமாகத் தானிருக்கிறது என்று விளங்கும். இத்தாலியில் சுமார் 20 ஜெர்மன் டிவிஷன்கள் இருக்கின்றன. இன்னும் அதிகமாக பிரான்சில் இருக்கின்றன. இரண்டாம் போர்முனை பிரான்சிலேயே ஆரம்பிக்கப்படலாம். இத்தாலி சரணடைந்து விட்டதனால், ஜெர்மன் படைகளுக்கு வேலை அதிகரித்து விட்டது. கிரீஸ் பால்கன் நாடுகள், யுகோஸ்லேவியா ஆகியவைகளில் போலீஸ் வேலைகள் செய்ய வேண்டி யிருக்கிறது. இப்போது நாஜிகள் திண்டாடுகிறார்கள். ''அடாது செய்வோர் படாது படுவார்.''

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

சீனா : முக்டென் சம்பவமும் அதற்குப் பிறகும்

சென்ற செப்டெம்பர் மாதம் 18-ம் தேதி முக்டென் சம்பவ ஆண்டு விழா. அப்போது அமெரிக்க ஐக்கிய மாகாண மந்திரி **மிஸ்டர் கார்டெல் ஹல்** ஒரு அறிக்கை விடுத்தார். அதில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

''வாழ்வதா சாவதா எனத் தக்கபடி உலகம் முழுதும் நடை பெறும் போராட்டம் தான் இது. (முக்டென் சம்பவம்). இந்தப் போராட்டத்தில் அமைதியான மனப்போக்குடைய நாடுகள் அக்கிரமக்காரப் படைக ளோடு போராடுகின்றன. 6 வருஷ காலம் சீனர்கள் கடுமையான பொருளாதாரக் கஷ்டங்களுக்கும் உடற் கஷ்டங்களுக்கும் உள்ளாயினர். உடற்கஷ்டம் அவர்களுக்கு மிகவும் அதிகம். என்றாலும் தம் எதிரிகளோடு மகா பிடிவாதமாகப் போராடினார்கள். எதிரிகளோ மகத்தான பலம் பொருந்தியவர்கள்.

அவர்களை எதிர்த்து சென்ற 6 வருஷங்களாகப் போராடி வருவது, ஒரு மாய வித்தை என்று தான் சொல்ல வேண்டும். ஜப்பானியர்கள் திடீரென்று சீனாவைத் தாக்கிய போது, சீனர்கள் கொஞ்சங் கூட ஆயத்தமா யில்லை.

1931-ம் வருஷம் நடைபெற்ற வெடி குண்டு சம்பவத்தை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, மஞ்சூரியாவைக் கைப்பற்றி விட ஜப்பானியர்கள் முயன்றார்கள். ரோம் நகரத்தின் மேல் முசோலினி எப்படி படை யெடுத்துக் கொண்டு சென்றாரோ, ஹிட்லர் எப்படி ஆதிக்கம் பெற்றாரோ, அது போலவே தான், ஜப்பானிய சரித்திரத்திலேயே இது ஒரு முக்கியமானதோர் பகுதியாகும்.

முதலில் ஜப்பானோடு போராட சீனா விரும்ப வில்லை. அதற்கான பலமும் மனமும் சீனாவிற்குக் கிடையாது. ஆனால் வரவர ஜப்பானிய அக்கிரமம் அதிகப்பட்டது. இது சீனர்களின் தேசீய உணர்ச்சியைக் கிளறி விட்டது. இதன் பயனாக, உள் நாட்டில் பொது வுடமைக்காரரோடு நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இது கடைசியில் சியான்பு கலகத்தில் கொண்டு போய் விட்டது.

தீப் பொறியினின்று பெரிய ஒளி.

பிறகு 1937-ம் வருஷம் ஜப்பான் சமரச நிபந்தனைகளை சீனாவிற்கு விதித்த போது அவற்றை சீனா ஏற்றுக் கொள்ளக் கூட வில்லை. இந்தப் பெரும் போராட்டமான ஒரு பேரொளி பரவுவதற்கு ஒரு சிறு பொறி தான் தேவை. அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஜூலை மாதக் கடைசியில், பீக்கிங்குக்கு 12 மைல் தூரத்திலுள்ள லுக்கோவ்கியோ பாலத்தில் ஒரு சீன இராணுவ ஸ்தல மிருந்தது. தாம் இராணுவப் பயிற்சியின் பொருட்டு சுட்டுப் பழகுவதாகக் கூறிக் கொண்டு, அந்த இராணுவ ஸ்தல மீது ஜப்பானியர்கள் சுட்டனர். சீனர்களும் பதிலுக்குச் சுட்டனர். போர் மூண்டது. இது, 7-7-1937-ல் நடை பெற்றது.

உடனே மஞ்சூரியாவி லிருந்த ஜப்பானியப் படைகள் வெகு வேகமாக வந்து பீக்கிங்கைத் தாக்கின. இது அவர்கள் எவ்வளவு தூரம் முன்னேற் பாட்டோடு இருந்தார்கள் என்பதைக் குறிக்கிறது. ஜப்பானி லிருந்தும் மஞ்சுகோவி லிருந்தும் அதிகப்படியாகப் படைகள் கொண்டு வரப் பட்டன. ஜூலை மாதக் கடைசியில் பீக்கிங்-டெய்ன்ஸ்டீன் ரயில்வேயிலுள்ள லாங்பாங் என்னும் இடத்தில் சில்லரைச் சண்டைகள் நேர்ந்தன. அதன் பிறகு சீனாவின் பழைய தலை நகரமாகிய பீகிங் மீது ஜப்பானியர் முழு மூச்சாகத் தாக்கினார்கள்.''

சீனாவின் மகத்தான தலைவரான சியாங்-கெய்-ஷேக் எந்தவித சமரசத்தையும் ஜப்பானோடு செய்து கொள்ள விரும்ப வில்லை. இது பற்றி, தான் வெளியிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

''நாட்டின் உறுதிப் பாட்டையும் அரசாங்க உரிமையையும் பாதிக்கத் தக்க எந்த வித ஒப்பந்தத்திற்கும் நான் இணங்க முடியாது. முக்டெனில் நிகழ்ந்தது போல பீகிங்குக்கும் நிகழுமானால், பீகிங்குக்குக்கு நிகழுவது நாங்கிங்குக்கும் ஏன் நிகழக் கூடாது ?''

பீகிங்கி லிருந்து நாங்கிங்கிற்குப் பின் வாங்கிப் போக வேண்டு மென்று சொல்லப்பட்ட தோர் ஆலோசனைக்குப் பதில் கூறிய சீனத் தலைவர், அக்கிரமக்கார ஜப்பானியர்களிடம் சீனர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பது பற்றி, கீழ்க்கண்ட வார்த்தைகளில் தெளிவாகக் குறிப்பிடுகிறார் :—

''யுத்தம் ஆரம்பமாகி விட்டால், நாம் பின் வாங்கிப் போக முடியாது என்பதை நாம் உணர வேண்டும். நாம் கடைசி வரை போராடியே தீர வேண்டும். ஒரு அங்குல நிலத்தையாவது நாம் அவர்களுக்கு விட்டுக் கொடுப்போ மானால், நம் இனத்தாருக்கே மன்னிக்க முடியாத தோர் தீங்கிழைத்தவர்க ளாவோம். ஆகவே, நாம் நம் நாட்டிலுள்ள எல்லாவற்றையும் கொண்டு கடைசியில் வெற்றி பெறுகிற வரை போராடியே தீர வேண்டும்.''

பீகிங்கி லிருந்து நாங்கிங்குக்கு

முதலில் பீகிங்கை ஜப்பானியர் கைப்பற்றினார்கள். பிறகு டெய்ன்ட்சின்னும் வீழ்ந்தது. அதன் பிறகு இரண்டு வாரங்கள் வரை சீனர்கள் தகுந்தபடி போராட்டத்தை ஆரம்பிக்கக் கூடவில்லை. சர்வதேசப் பட்டணமான ஷாங்ஹையில் போர் ஆரம்பமான பிறகு தான், சீனா முழுதும் யுத்தம் நடக்கப் போகிற தென்று தெளிவாகத் தெரிந்தது. ஆகஸ்டு மாதம் 13-ம் தேதி முதல் மகா கடுமையான யுத்தம் நடை பெற்றது. சீனர்கள் மகா வீரத்தோடு போராடினார்கள் ; என்றாலும் அவர்களுக்கு அனுபவம் போதாது. பத்து நாட்களுக்குப் பிறகு யாங்ட்சி ஆற்றின் தென் கரையில் ஜப்பானிய படைகள் வந்திறங்கின. அப்போது அங்கிருந்த சீனப் படைகளின் இடது பகுதிக்கு ஆபத்து ஏற்படக் கூடும். இதை யுணர்ந்து அந்தப் படை அங்கிருந்து ஷாங்ஹைக்குப் பின் வாங்கியது. ஜப்பானியப் படை முன்னேறிப் போய், சீனத் தலை நகரான நாங்கிங்கை

(8-ம் பக்கம் பார்க்க.)

பழைய குறைகளையும் சந்தேகங்களையும் பேசிப் பயனென்ன?

வர்த்தகத்திலும் பொருளாதாரத்திலும் பரஸ்பர சம்பந்தம் வேண்டும்

பசியும், பிணியும், பகையும் இல்லாமல் வாழவேண்டும்

சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் வானொலிப் பிரசங்கம்

[செப்டெம்பர் மாதம் 29-ம் தேதி, சென்னை வானொலி நிலயத்திலிருந்து சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் "யுத்த முயற்சி" என்னும் தலைப்பின்கீழ் ஒலி பரப்பிய பிரசங்கமாவது :—]

சரியாக நான்கு வருஷங்களுக்கு முன் 1939-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 3-ந் தேதி ஹிட்லர் ஜெர்மெனியின் அடுத்த வீடாகிய போலந்தில் தீயை வைத்தான். அன்று அவன் வைத்த நெருப்பு உலகத்தைச் சுற்றி வளைத்து இன்னும் தணியாமல் மூண்டு எரிந்து கொண்டிருக்கிறது. நம்முடைய வீட்டைச் சுற்றிலுமுள்ள எல்லா இடங்களும் நெருப்புப் பிடித்து நாசமாகும்போது நாம் மாத்திரம் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நம்முடைய வீட்டைப் பாதுகாக்க நாமும் நெருப்பை அணைக்க முயற்சி செய்ய வேண்டியது அவசியம் தான். இப்படிப் பட்ட வேளையில் நெருப்பை முதலில் மூட்டியவன் நல்லவனா கெட்டவனா, யார் வீட்டில் அவன் நெருப்பை வைத்தானோ அவன் நண்பனா அல்லது நம்முடைய பகைவனா என்றெல்லாம் ஆலோசனை செய்வதற்கு, இது சமயமல்ல. நெருப்பை அணைப்பதற்கு முயற்சி செய்பவர்களோடு நாமும் சேர்ந்து அந்த முயற்சியில் பங்கு கொள்வதே நம்முடைய முதற் கடமையாகும்.

யுத்தத்தில் சேராத நாடுகளின் கதி என்ன ?

யுத்தம் ஆரம்பித்த சமயத்தில் நம்முடைய நிலைமை சிந்திக்கத் தக்க விதமாகத் தான் இருந்தது. நம்முடைய நாட்டின் பாதுகாப்புக்காக நாமும் யுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. ஹிட்லருக்கு நம்மிடம் விரோதமில்லை. நாம் நடு நிலைமையாக இருந்திருந்தால் நமக்கு யாதொரு துன்பமும் வந்திராது என்று நினைத்தவர்களுடைய மனப்பான்மை தவறு என்று ஆரம்பத்திலேயே விளங்கி விட்டது. உலகத்தைத் தன் ஆட்சிக்குள் அடக்கி ஆளும் நோக்கத்துடன் ஹிட்லரும், அவனைச் சேர்ந்த நாஜி வெறியர்களும், இந்தப் பெரிய கொடூர யுத்தத்தை ஆரம்பித்தார்கள். யுத்தத்தில் சேராமல் நடுநிலைமையாய் இருந்த பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், நார்வே முதலிய நாடுகளின் கதி என்னவாயிற்று ?

இந்த யுத்தத்தின் அடிப்படையான போக்கு என்னவென்பதை முதன் முதல் அறிந்து கொண்டவர்களில், ஒருவர், ஜனாதிபதி ரூஸ்வெல்ட். அச்சு நாடுகள் வெற்றி பெற்றால், உலகத்தில் மனித சுதந்திரம் என்பதே அற்றுப் போயவிடும், என்னும் உண்மையை நன்றாய் உணர்ந்தபடியால் தான், அவர் யுத்த ஆரம்பத்திலிருந்தே நேச நாடுகளுக்கு வேண்டிய உதவியைச் செய்து வந்தார். அமெரிக்கா யுத்தத்தில் சேராமல் நடு நிலைமையே வகிக்கவேண்டு மென்று அத்தேசத்தில் பலரும் முயற்சி செய்தார்கள். அதற்காகப் பெரிதும் பாடுபட்டார்கள். ஆனால் பயன்படவில்லை, ஜப்பான் அக்கிரமமாக அமெரிக்காவைத் தாக்கிய விதம், நம் எல்லோருக்கும் தெரியும். உலகத்தையே அடக்கி ஆள வேண்டு மென்னும் நோக்கத்துடன் அச்சு நாடுகள் கங்கணம் கட்டிய போது, இந்த யுத்தத்தில் எல்லா முக்கிய நாடுகளும் கலந்து தான் ஆக வேண்டு மென்றாகி விட்டது.

முந்திய யுத்தங்களுக்கும், இதற்கும் உள்ள வேற்றுமை.

இந்த யுத்தத்திற்கும் இதற்கு முன் உலகத்தில் நடந்த எல்லா யுத்தங்களுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. சாதாரணமாய் யுத்தம் என்றால் ஒரு போர்க்களத்தில் அது நடைபெறும். சைன்யங்களைச் சேர்ந்த போர் வீரர், போர்க்களத்தில் மடிவார்கள். கிராமங்களிலும், பட்டணங்களிலும், வசிக்கும் மக்கள் தங்கள் தங்கள் தொழிலைச் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படாது. இந்த யுத்தம் இப்படிப் பட்டதல்ல. போர் வீரர்களுக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்குமே அபாயம் தான். விமானத் தாக்குதலால் கிராமங்களில் வசிக்கும் ஒரு பாவமு மறியாத குழந்தைகளும், பெண்களும், விருத்தாப்பியரும் மடிகிறார்கள். பள்ளிகளும், கோயில்களும், ஆஸ்பத்திரிகளும் அழிகின்றன. நிலத்திலும் அபாயம், நீரிலும் அபாயம், ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு தொழிற்சாலையும் ஒரு போர் முனை. நாம் எல்லோரும் போரில் ஈடுபட்டவர்களாய் இருக்கின்றோம். இந்தக் காரணத்தால் தான், இந்த யுத்தத்தை, "உலகப் போர்" என்று சொல்வது மிகவும் பொருத்தமா யிருக்கின்றது.

இந்தப் போரின் காரணமாக மனித வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பெரிய மாறுதல் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகாயக் கப்பலின் மகிமையால் உலகமே சிறிதாய்விட்டது என்று சொல்ல வேண்டும். பம்பாயிலிருந்து லண்டனுக்கு இரண்டு நாட்களில் போகலாம். நியூயார்க்குக்கு மூன்று நாட்களில் போய்ச் சேரலாம். கல்கத்தாவிலிருந்து சைனாவுக்கு ஒரு நாளில் போய்விடலாம். எல்லா நாட்டாரும் ஒருவருக் கொருவர் அடுத்த வீட்டுக்காரர் என்னும் நிலைமையில் வந்து விட்டார்கள். இந்தியாவிலும், சீனாவிலும், என்ன நேர்ந்தால் நமக்கென்ன என்று அமெரிக்கர் சும்மா விருக்க முடியாது. ஒரு தேச மக்களுடைய வாழ்க்கையின் இன்ப துன்பங்கள், கலாசாரம், நாகரிகம், இவையெல்லாம் அயல் நாட்டாரின் வாழ்க்கையிலும் புகுந்து விடும்.

பல நாட்டாருக்குள்ளும் பரஸ்பர தொடர்பு.

அரசியல், பொருளாதாரம் முதலிய எந்தத் துறையிலும் ஒரு நாட்டார் சுயேச்சையாய் தங்கள் விருப்பம் போல் வாழ்க்கையை நடத்த, இனிமேல் முடியாது. எல்லா நாட்டு மக்களும் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைக்க வேண்டிவரும்.

வர்த்தகத்திலும், பொருளாதார விஷயங்களிலும் உலகிலுள்ள பெரிய தேசங்கள் ஒன்றோடொன்று சமாதானமாய் ஒத்துழைத்தால், வறுமையைக் குறைத்து விடலாம். விளை பொருள்கள் ஏராளமாய் உலகத்தில் விளைகின்றன. விஞ்ஞானத்தின் மூலம் கைத் தொழில்கள் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து வருகின்றன. மக்களுக்கு வேண்டிய அளவு உணவும் உடையும் இருந்தும், வறுமையும் கூடவே அதோடு இருப்பதற்கு முக்கிய காரணம், ஒவ்வொரு தேசமும் தங்கள் தங்கள் சுயநலத்தையே நாடுவது தான். பொருளாதாரப் பாதுகாப்புச் சட்டங்களால் வியாபாரத்துக்கும் எவ்வளவோ முட்டுக் கட்டைகள் ஏற்பட்டுவிடுகின்றன. 1931-ம் வருஷம் சில தேசங்களில் கோதுமை, காப்பிக்கொட்டை இவை போன்ற உணவுப் பொருள்களை அடுப்பில் போட்டு எரித்தார்கள். கடலிலும் கொட்டினார்கள். என்ன மூடத்தனம்......கோடிக்கணக்கான மக்கள் போதுமான உணவு இல்லாமல் ஒரு புரம் தவிக்கிறார்கள். மற்றொருபுரம் கோதுமையை விறகுக்குப் பதில க எரிக்கிறார்கள். இந்தக் குழப்பமான பொருளாதார நிலை யுத்தத்திற்கு ஒரு காரணம் என்றும் சொல்லலாம்.

இதுவரை காணாத புதிய உலகம்.

இந்த யுத்தம் முடிந்த பின் நாம் வாழும் உலகம், நாம் இது வரை காணாத புதிய உலகமாய் மாறும் என்று அநேகர் எதிர் பார்க்கிறார்கள். பசியும், பிணியும் பகையும் இல்லாமல் வாழ வேண்டுமென்று, நமது பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சொல்லப் பட்டிருக்கின்றது. இதே கொள்கை தான் புதிய உலகத்திற்கும் அடிப்படையான தத்துவம். வறுமையும், நோயும், பகையும், ஒழிந்துவிட்டால், மனித வாழ்க்கையின் எல்லாத் துன்பங்களும் பறந்தோடிவிடும். யுத்தம் முடிந்த பின் செய்ய வேண்டிய சீர் திருத்தங்களைப் பற்றிய பல திட்டங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்க நாட்டார் உலக விவகாரங்களில் அதிகமாய்க் கலந்து கொள்வதில்லை. இந்த மனப்பான்மை இப்போது மாறிவிட்டது. உலகப் போக்கை அனுசரித்து, தங்களுடைய நன்மைக்கும், பொது நன்மைக்கும், தாங்களும் உலக விவகாரத்தில் பங்கெடுத்துக் கொள்வது அவசியமென்று அவர்கள் இப்போது நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தால் தான், யுத்த முயற்சியில் அவர்கள் தீவிரமாய் ஈடுபட்டிருக்கிறார்கள். யுத்த முடிவில் ஏற்படப்போகும் சமாதானம், புது அமைப்பு முதலிய பெரிய வேலைகளில் முக்கிய பங்கு எடுப்பதற்கு இப்போழுதே ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

உலக வாழ்க்கையில் முதன்மையான நான்கு நாடுகள்.

இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா, சீனா, இந்த நான்கு தேசங்களும் உலக வாழ்க்கையில் முதன்மையானவை என்னும் பதவிக்கு வந்து விட்டன. அச்சு நாடுகளின் அட்டூழியத்தை ஒழிப்பதில் இவர்கள் செய்த தியாகமும், தொண்டும்தான் இவ்வளவு உன்னத பதவியை இவர்களுக்குக் கொடுத்தன. சீனர்கள் வீரமும், தியாகமும் தனிப்படையாய்க் குறிப்பிட வேண்டியவை. ருஷ்யாவின் வீரம் எல்லோரையும் வியப்படையும்படி செய்துவிட்டது. நேச நாட்டாரோடு நாமும் சேர்ந்திருப்பது நம்முடைய பாக்கியமே யாகும். இங்கிலாந்தின் அரசியல் பயிற்சி, அமெரிக்காவின் ஜனநாயகத் தத்துவம், ருஷியாவின் சமத்துவக் கொள்கை, சீனாவின் பழங் கௌரவம், இவைகளுடன் இந்தியாவின் முதிர்ந்த பண்பாடும் சேர்ந்து ஒத்துழைத்தால், மனித வாழ்க்கை உன்னத நிலையை அடையும் என்பதில் என்ன சந்தேகம்? 'பசித்தவன் பழைய கணக்கைப் பார்த்தது' போல், நாம் பழைய குறைகளையும் சந்தேகங்களையும் திருப்பித் திருப்பி பேசிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? யுத்தத்தில் நேச நாட்டார் வெற்றி அடையும் வரையில், நாமும் விடா முயற்சியுடன் ஒத்துழைத்து, ஒற்றுமையுடனும், தைரியத்துடனும் இருந்தால், புதிய உலகில் நமக்கும் ஒரு கௌரவமான இடம் கிடைக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

விலைகளை உயர்த்துவதும் குறைப்பதும் பொதுமக்களே

அரசாங்கத்தின் மேல் பழி கூறக் கூடாது

பணத்தை மிச்சப் படுத்திப் போட்டு வைக்க வேண்டிய வழிகள்

மிஸ்டர் சி. சத்தியநாராயண சௌத்ரி அவர்கள் விளக்கம்

மேட்டுப்பாளையத்தில் நடைப் பெற்ற ஒரு விவாதத்தின் போது, கோயமுத்தூர் ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் சி. சத்தியநாராயண சௌத்திரி அவர்கள் கீழ்கண்ட ரசமான விஷயங்களைக் குறிப்பிட்டார்கள் :—

திடீரென்று விலைவாசிகள் வெகு அதிகமாக உயர்ந்திருப்பதற்கு முக்கிய காரணம், தனக்கு ஏராளமான இலாபம் திரட்ட வேண்டு மென்னும் நோக்கத்தோடு, பருவத்தை தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு, தம் தேவைக்கு மீறி, ஏராளமாக மிச்சப்படுத்தி வைத்துக் கொள்ளுகிறவர்கள் தான். இவர்கள் நாடு முழுது மிருக்கிறார்கள். இவர்கள் சரக்குகளைக் கட்டி வைத்துக் கொள்ளுவதனால்தான், விலைகள் உயருகின்றன. அன்றியும் ஏராளமான சாகுபடி செய்கிறவர்கள் விலைவாசிகள் மேலும் உயரப் போகின்றன ; அப்போது தம் அறுவடையை விற்கலாம் என்று அதைக் கட்டி வைக்கிறார்கள். அவர்களும் தான் விலைவாசிகள் உயருவதற்கு பொறுப்பாளிகள். கொஞ்ச சாகுபடி செய்கிறவர்களும் கூட இந்தப் பேராசைக்கு உள்ளாகிறார்கள். அல்லாமலும் பேராசை கொண்ட தன்னல மிக்கவர்கள், என்ன விலை கொடுத்தாவது பல மாதங்களுக்கு அல்லது வருஷங்களுக்குத் தேவையான அளவிற்கு தானியங்களை வாங்கிக் கட்டிக் கொள்ளுகிறார்கள். இதன் பயனாக, சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய தானியம் கட்டுக் கிடையாய் விடுகிறது. ஆகவே, விற்பனைக்கு வரும் தானியத்தின் அளவு குறைந்து, தேவை அதிகப்படுகிற போது, விலைவாசிகள் உயரத் தான் செய்யும். தம் தேவைக்கு அதிகமாக தானியங்களை வாங்கி இருப்புக் கட்டுகிறவர்களும் விலைவாசிகள் மிகவும் உயருவதற்குப் பொறுப்பாளிகள் தான். இவற்றிலிருந்து விலைவாசிகள் வெகுவாக உயர்ந்ததற்கு காரணம் முற்கூறிய பொது மக்களின் பேராசையும், தன்னலமும், சமூக விரோதமான உணர்ச்சிகளும் தான் என்று தெளிவாகிறது.

இதைப் போக்க வழி என்ன ?

இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களுக்குத் தீங்கு செய்கிறார்கள். விலைவாசிகளை அரசாங்கத்தாரே நிர்ணயிக்க வேண்டு மென்றும், எல்லா தானியத்தையும் அரசாங்கத்தாரே கைப்பற்றி விநியோகிக்க வேண்டு மென்றும் யோசனை கூறுவது எளிது. இதைச் செய்து முடிப்பதற்கு அரசாங்கத்திற்கு நெடுங்காலம் பிடிக்கும். அதற்குள் யுத்தமே முடிந்துவிடலாம். இதற்குப் பரிகாரம் பொது ஜனங்களே செய்து கொள்ளலாம். கொள்ளை லாபமடிக்கும் தன்னலக்காரர்களைக் குறித்து அதிகாரிகளுக்கு கிராமவாசிகளும் நகரவாசிகளும் தகவல்கள் கொடுப்பார்களானால், நிலைமையை வெகு சீக்கிரத்தில் கஷ்ட மில்லாமல் சமாளித்துக் கொள்ளலாம்.

எந்தப் பொருளுக்காவது தேவை அதிகப்பட்டால், அதன் விலையும் உயருவது இயற்கை. உங்களுடைய தினசரி வாழ்க்கையில் இந்த உண்மையை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், அரசாங்கத்திற்கு நீங்கள் உதவலாம். இன்று முதல் உங்கள் தேவைகளுக்கு எவ்வளவு குறைவாக வாங்கக்கூடுமோ அவ்வளவு குறைவாகவே வாங்கவேண்டும் ; உங்களுக்கு மிகவும் இன்றியமையாததா யிருந்தாலல்லது எதையும் வாங்கலாகாது. இரண்டொரு வாரத்திற்கோ அல்லது ஒரு மாதத்திற்கோ மட்டும் தேவையான அளவிற்கு வாங்க வேண்டும். நீங்கள் அனைவரும் இப்படிச் செய்தால், சரக்குகளைக் கட்டிவைக்க வேண்டும் என்னும் உணர்ச்சி, அந்தக் கொள்ளை இலாபக்காரர்களுக்குப் போய்விடும். விலைவாசிகள் குறைந்துவிடக் கூடும் என்னும் அச்சத்தினால், அவர்கள் தாம் கட்டிவைத்த சரக்குகளையெல்லாம் விற்பனைக்குக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்படும்.

எதிர்காலத் தேவைகளுக்கு வசதிகள்.

இதனால் விலைவாசிகள் குறையும். அப்போது, ஒரு ரூபாய்க்கு இப்போது கிடைக்கும் அளவை விட அதிகமாகவே பண்டங்கள் கிடைக்கும் அதனால் செலவு குறைந்து, உங்கள் சம்பாத்தியத்தில் மிச்சப்படும். அரசாங்க உத்தியோகங்களி லிருக்கிறவர்கள் தவிர, மற்றவர்களெல்லோரும் மேலான நிலைமையிலிருக்கிறார்கள். முன்பைவிட அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். இப்போது நீங்கள் மிச்சப்படுத்தாவிட்டால், இனி ஒரு போதும் மிச்சப்படுத்தமாட்டீர்கள். யுத்தத்திற்குப் பிறகு வாழ்க்கை நிலை எப்படி அமையும் என்பது பற்றியும் யாருக்கும் தெரியாது. ஆகவே எதிர்காலத்திற் கென்று நீங்கள் ஏதேனும் மிச்சப்படுத்தி வைத்துக் கொள்ளுவது புத்திசாலித் தனமாகும். முற்கூறியது போல் ஒவ்வொரு கிராமத்திலும் பட்டணத்திலுமுள்ளவர்கள் ஏற்பாடு செய்து கொள்ளுவார்களானால், இப்போது அவர்கள் கொஞ்சம் மிச்சப்படுத்த முடியும், நீங்கள் மிச்சம் செய்யும் தொகையை நீங்கள் எளிதில் எடுத்துக் கொள்ளமுடியாதபடி அது போட்டுவைக்கப் படவேண்டும். ஏனென்றால் அதிலிருந்து பணத்தை எடுக்க வேண்டும் என்னும் எண்ணம் அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஆகவே, நீங்கள் மிச்சப்படுத்திப் போட்டுவைக்கும் பணத்தால் உங்களுக்கு வட்டி கிடைக்கத் தக்கபடியும், பொதுஜன உபயோகத்திற்காகச் செலாவணியாகத் தக்கபடியும் அதைப் போட்டுவைக்க வேண்டும். நீங்கள் இப்படிச் செய்வதனால், விலைவாசிகள் உயராதபடி தடுக்க அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள கொள்கைக்கு, உதவியவர்கள் ஆவீர்கள்.

மிச்சப் பணத்தைப் போட்டு வைப்பது எப்படி ?

அரசாங்க கடன் பத்திரங்களிலும், பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்களிலும் நீங்கள் மிச்சம் செய்யும் தொகைகளைப் போட்டு வைக்க நீங்கள் தயங்க வேண்டியதே யில்லை. பாதுகாப்பு சேமிப்பு பத்திரங்கள் இருப்பதாகவே நாம் நினைக்கவில்லை. ஜப்பானியர்கள் நம் நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளுவார்க ளென்றும் அப்போது, இங்குள்ள பணமெல்லாம் பயனற்றுப் போகுமென்றும் இப்போது யாரும் நினைக்கமாட்டார்களென்று நான் நம்புகிறேன். என்றாலும், குறும்புக்காரர்கள் இப்படிப் பட்டதோர் பீதியை உண்டாக்கி, நேசநாட்டினர் சம்பந்தமாக ஊக்கக் குறைவை உண்டாக்க முயற்சித்தார்கள். அப்படிப்பட்ட பயம் உண்டாக இப்போது இடமே கிடையாது. எல்லாவிடங்களிலும் ஜப்பானியர்களுக்கு இப்போது படுதோல்வி தான். ரஷ்யாவிலிருந்து ஜெர்மானியர்கள் ஓட்டமெடுக்கிறார்கள். இத்தாலி கவிழ்ந்துவிட்டது. ஆள்பலத்திலும் பொருள் பலத்திலும் நேசநாட்டினர் வற்றாத நிலைமையி லிருக்கின்றனர். நேசநாட்டினர் பலம் நாளுக்கு நாள் ஓங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அச்சு நாட்டினர் பலம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது.

நமக்கு வெற்றி கிடைப்பது உறுதி. கூடிய விரைவில் வெற்றி கிடைக்கு மென்பது பற்றி நமது படைத் தலைவர்களும் அரசியல் வாதிகளும் உறுதியா யிருக்கிறார்கள். பீதி மிகுதியினால், என்ன விலையானாலும் கொடுத்து நிலங்களையும் வீடுகளையும் வாங்க வேண்டு மென்று கண்ணை மூடிக்கொண்டு நினைந்தவர்க ளெல்லாம், இப்போது அச்சு நாடுகள் பல போர்முனைகளிலும் நாள்தோறும் தோற்றுக்கொண்டு வருவதையும், நேசநாட்டுப்படைகள் முன்னேறிக்கொண்டு வருவதையும் கண்டு, நம்பிக்கை கொண்டு வருகிறார்கள். நேசநாட்டுப் படைகளின் பலம் ஓங்கி வருகிறது என்ற நம்பிக்கை உண்டாகிறபடியால், நிலங்களின் விலையும் வீடுகளின் விலையும் குறைந்து கொண்டு வருகின்றன. ஆகவே, இப்போது அநியாய விலைகொடுத்து நிலத்தையும் வீடுகளையும் வாங்குகிறவர்கள், அவற்றின் விலைகள் குறைகிற போது (கட்டாயம் குறையத் தான் செய்யும்) கட்டாயம் வருத்தப்படுவார்கள். அப்போது உங்கள் பணத்தைக் கொண்டு அதிகப் பொருட்களை வாங்கலாம். இப்படிப்பட்ட நிலைமையில், உங்கள் நன்மையை முன்னிட்டு, எவ்வளவு அதிகமாக நீங்கள் மிச்சப்படுத்தக் கூடுமோ, அவ்வளவு அதிகமாக மிச்சப்படுத்தி, அவற்றை அரசாங்கக் கடன் பத்திரங்களிலாவது, பாதுகாப்பு சேமிப்புப் பத்திரங்களிலாவது போட்டுவைக்க வேண்டும். இங்கே கூடியுள்ளவர்களில் சிலர், பாங்கிகளிலும், கூட்டுறவு சங்கங்களிலும், மில்களிலும் சம்மந்தமுள்ளவர்கள். இந்தப் பாதுகாப்புக்களின் பொருள் விளங்காததனால், பொது மக்கள், பாதுகாப்பு சேமிப்புப் பத்திரங்கள் வாங்கத் தயங்குவதாக அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நான் ஒரு யோசனை கூறியிருக்கிறேன். அவர்கள் தங்கள் பணத்தை பாங்கிகளிலும் கூட்டுறவு சங்கங்களிலும் போடட்டும். அந்த பாங்கிகளும் கூட்டுறவு சங்கங்களும் அத்தொகைகளைக் கொண்டு பாதுகாப்பு சேமிப்புப் பத்திரங்கள் வாங்கி, அவர்களுக்குப் பொறுப்பாளிகளா யிருக்கட்டும். அவர்களும் என் யோசனையை ஒப்புக் கொண்டார்கள்.

இந்த ஜில்லாவிலுள்ள பொது ஜனங்கள் 65 லட்ச ரூபாய் மிச்சம் பிடிக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் விரும்புகிறார்கள். இதை இனாமாகவோ சந்தாவாகவோ கொடுக்கும்படி அரசாங்கம் நம்மைக் கோரவில்லை. இந்தத் தொகையை நீங்கள் மிச்சப்படுத்துவீர்களானால், யுத்தத்திற்குப் பிறகு, இது உங்களுக்கு மிகவும் உபயோகமா யிருக்கும். யுத்தச் செலவுகளுக்காகப் பணம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுவதற்காக நான் இங்கே வரவில்லை யென்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். இப்போது நீங்கள் மிச்சப்படுத்தி வைக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்றும், அதனால் உங்களுக்கு நன்மையுண்டு என்றும் தெரிவிக்கத் தான் நான் வந்தேன். இங்கிலாந்தில் நாள்தோறும் மூன்று கோடி ரூபாய் செலவாகிறது ; இத்துடன் நீங்கள் யுத்தநிதிக்கு உதவும் தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால், மிகமிகக் கொஞ்சமாகத் தான் இருக்கும். சென்ற நான்கு வருஷங்களாக இம்மாகாண முழுதும் யுத்த நிதிக்கென்று வசூலிக்கப்பட்ட தொகை, இங்கிலாந்தின் ஒரு நாளைய யுத்தச் செலவிற்குக் கூட போதாது. நான் இதை ஏன் கூறுகிறேனென்றால், ஐரோப்பாவிலோ பசிபிக்கிலோ நடைபெறும் யுத்தத்திற்கு உதவிபுரியும்படி நீங்கள் கோரப்பட வில்லை என்று எடுத்துக் காட்டத் தான்.

உங்களுடைய நன்மைக்காகவே உழையுங்கள்.

உங்களுடைய நன்மையை முன்னிட்டு, நான் இதுவரை கூறியது போலவே செய்யுங்கள். தன் கஷ்டங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தன்னால் இயன்றவரை முயற்சித்து, முடியாமற் போனால் மட்டுந் தான், பிறருடைய உதவியைக் கோருவது இயற்கை. தன் முயற்சியுள்ளவர்கள் பக்கிலே தான் கடவுள் இருப்பார் என்பது எல்லா மதங்களும் ஒப்புக் கொண்ட உண்மை. ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர்களும் தங்கள் கஷ்டங்கள் எவை, அவற்றை நீக்குவது எப்படி, என்று தெளிவாக உணர்ந்து, அவற்றை நீக்க முயற்சிக்காமல், அரசாங்கத்தார் வந்து உதவ வேண்டு மென்று எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும் ? கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கத்தார் எப்போதும் ஆவலா யிருக்கிறார்கள். தம்மால் இயன்ற வரை உதவுகிறார்கள். அரசாங்க முயற்சிகளால் உங்கள் கஷ்டங்கள் நீங்க வில்லையானால், அதற்குக் காரணம், அரசாங்கத்தோடு நீங்கள் ஒத்துழைத்து உங்கள் கடமையைச் செய்யாதது தான். நீங்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து உங்கள் கடமைகளைச் செய்வீர்களானால், இந்தத் துறைகளில், அரசாங்கத்தின் முயற்சியினால் ஏற்படும் பலன்கள் மிகவும் உயர்ந்தவையா யிருக்கும். உங்கள் கஷ்டங்களும் விரைவில் நீங்கிவிடும்.



படைகளுக்கு ஆட் சேர்த்தலும், யுத்த முயற்சியும்

சென்னை மாகாணம் எடுத்துக் கொண்ட பெரும் பங்கு

திவான் பகதூர் எம். ராமன் அவர்களின் சொற்பொழிவு

திவான் பகதூர் எம். ராமன் அவர்கள்.

இன்று யுத்தம் நம் தலைவாசலுக்கு வந்து விட்டது. இதுவரை நம் தலை வாசல்களில் போராட்டங்கள் நிகழ்ந்ததில்லை. இப்போது எங்கே பார்த்தாலும் போர்முனையாகத் தானிருக்கிறது. ஆகவே அச்சு நாடுகளின் ஆதிக்கத்தை அடியோடு மீண்டும் தலை தூக்காதபடி நாம் அழித்து விட வேண்டுமென்று இப்போது உணருகிறோம். இது வரை ஏராளமான பொருட்களும் உயிர்களும் தியாகம் செய்திருக்கிறோம். நம் நாட்டிற்கும் நம் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும் பேராபத்துக்களை உணர்ந்திருந்தும், நம் ஒவ்வொருவரும் இயன்றவளவு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு உதவா விட்டால், இவ்வளவு தியாகமும் வீணாகப் போகும். நாம் ஒவ்வொருவரும் இளைஞர்களும் முதியவர்களும் பிரயோஜனகரமான தொண்டு எதேனும் செய்யலாம். போராட முடியாதவர்கள், மற்ற வகைகளில் தொண்டு புரியலாம். யுத்த நிதிக்குப் பணம் கொடுத்து உதவலாம். ஆனால், போராடும் படைகளில் சேர இந் நாட்டு இளைஞர்களாகிய நீங்கள் நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் முன் வர வேண்டும். இளைஞர்களே! முதியவர்களை விட நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். நீங்கள் ஆயுதங்களைக் கையாளலாம். மிகவும் உன்னதமானதும் உபயோகமானதுமான இந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ளுகிறீர்கள். அன்றியும், பல நாடுகளையும் அந்நாடுகளிலுள்ள மக்களையும் காண்பீர்கள். அதனால் உங்களுக்கு மிகுந்த அனுபவம் உண்டாகும். ஏற்கெனவே, நம்மவர்களில் அநேகர் வெற்றி வீரர்களாக விளங்குகிறார்கள். பெரும் புகழைத் தேடிக் கொள்ளுகிறார்கள். 1940-ம் வருஷத்தில் ஜெனரல் வேவல் தலைமையில் நடைபெற்ற சரித்திர சம்பந்தமான தாக்குதல் போராட்டத்தின் போது, இந்தியத் துருப்புகள் தான் முன்னணியிலிருந்து போராடின. "இந்தியாவின் உதவி யில்லாவிட்டால், மத்திய கிழக்குப் போர் முனையை வென்றிருக்க முடியாது" என்று ஜெனரல் வேவலே குறிப்பிட்டார்.

படைகளுக்கு ஆள் திரட்டும் முயற்சி.

யுத்தம் 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3-ம் தேதி ஆரம்பமானது. 1940-ம் வருஷ ஆரம்பத்தில் படைகளின் பல அங்கங்களுக்கும் ஆட்களைத் திரட்டும் வேலை ஆரம்பமானது. ஆரம்பத்தில் மிகக் கொஞ்சம் பேர்கள் தான் படைகளில் சேர்ந்தார்கள். பிற்பாடு அது மகா திருப்திகரமாயிருந்தது. அநேகம் பேர்கள் சேர்ந்தனர். வேறெந்த மாகாணத்திலும் நம் மாகாணத்தில் சேர்ந்த அளவிற்குச் சேரவில்லை. அன்றியும், திறமையிலும் நம் மாகாணத்தில் சேர்ந்தவர்கள் மற்ற மாகாணத்தவரைக் காட்டிலும் பெரிதும் மேம்பட்டிருக்கின்றனர். தற்கால யுத்தம் இயந்திர யுத்தம். இதற்கு கல்வியும் புத்திசாலித்தனமும் வேண்டும். இந்த மாகாணத்தில் கற்றவர்களும் புத்திசாலிகளும் ஏராளமாயிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான இளைஞர்கள் படைகளில் சேர்ந்திருக்கிறார்கள். ஆகையால் இது உங்களுக்கு ஏற்ற தருணம்.

1942-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஒரு கோஷ்டியோடு சேர்ந்து, சிக்கந்தராபாத், பம்பாய், டியோலி, மௌ ஆகிய ஊர்களைப் பார்வையிட்டேன். அங்கே பயிற்சி பெற்று வரும் உத்தியோகஸ்தர்களும், தொழிலாளர்களும், மற்றும் எல்லா வகையினரும் மிகவும் மகிழ்ச்சியோடிருக்கிறார்கள்; நன்றாகப் பராமரிக்கப்படுகிறார்கள். நன்றாகவும் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். அவர்களுடைய உடல் நலம் மிகவும் சிறந்திருக்கிறது. அங்குள்ள இராணுவ உத்தியோகஸ்தர்கள் தம்மிடம் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களான இளம் உத்தியோகஸ்தர்களைக் குறித்துக் கூறிய போது, நான் மிகவும் பெருமிதமடைந்தேன்.

பலவகைப் படைகளுக்கு ஆட் சேர்த்தல்.

மூன்று வகைப் படைகளிலும் மன்னர் பிரான் கமிஷன் உத்தியோகங்கள் தவிர, மற்ற உத்தியோகங்களுக்கு ரிக்ரூட்டிங் ஆபீஸர்களும், உதவி ரிக்ரூட்டிங் ஆபீசர்களும், விசேஷ உதவி ரிக்ரூட்டிங் ஆபீசர்களும் ஆள் திரட்டுகிறார்கள். எனக்குள்ள சவகாசத்தில், உத்தியோகங்களின் ஜாபிதாவை மட்டுந் தான் நான் கூறக் கூடும்.

அசல் சிப்பாய்களாக ஆட்களைச் சேர்ப்பது தான் முதன்மையானதும் முக்கியமானதுமாகும். தகுந்த வயதும் உடற் கட்டும் உள்ளவர்களைத் தான் இதற்குச் சேர்க்கிறார்கள். நாம் எதிர் பார்த்ததைவிட வெகு அதிகம் பேர் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

தொழிலாளிகள், தொழிலாளர் ரிக்ரூட்டிங் ஆபீசருக்கு, மனுச் செய்து கொள்ள வேண்டும்.

குமாஸ்தாக்களில் போராடுகிறவர்களையும் போராடாதவர்களையும் ரிக்ரூட்டிங் பகுதியினர் தான் பொறுக்கி எடுக்கிறார்கள்.

தன் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்யும் ரிக்ரூட்டிங் உத்தியோகஸ்தரிடமிருந்து எல்லா விவரங்களையும் மனு நமூனாவையும் இலகுவில் பெற்றுக் கொள்ளலாம். சென்னையில் புதுப்பேட்டை லைனிலுள்ள ரிக்ரூட்டிங் ஆபீஸரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

17 வயதிற்கு மேல் 40 வயதிற்குட்பட்டவர்களுக்கு தொழிற் பயிற்சித் திட்டமொன்றிருக்கிறது. பலவகைத் தொழில்களில் பயிற்சி பெற அங்கே இடமுண்டு. 'நாஷனல் சர்விஸ் லேபர் ட்ரிப்யுனல்' தலைவருடைய காரியாலயம் சென்னையிலிருக்கிறது. சென்னையிலுள்ளவர்கள் அவருக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். வெளியூரிலிருப்பவர்கள் அந்தந்த ஜில்லா கலெக்டர் மூலமாக மனுச் செய்து கொள்ளலாம். அன்றியும், 'நாஷனல் சர்விஸ் லேபர் ட்ரிப்புனல்' தலைவர் இங்கிலாந்தில் உயர்தர கைத்தொழில் பயிற்சிக்கு இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கிறார். ஆறு மாணவ கோஷ்டிகள் ஏற்கெனவே அனுப்பப்பட்டுவிட்டன. இவர்களில் சில கோஷ்டியினர் பயிற்சி பெற்றுத் திரும்பி, பலவகைத் தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வருகிறார்கள்.

வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்கள்.

வைசிராய் கமிஷன் உத்தியோகத்திற்குக் கூட நேர்முகமாக, அபேட்சகர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். இவர்கள் 18 வயதிற்கு மேல் 30 வயதிற்குட்பட்டவர்களாயிருக்க வேண்டும். தகுதிகள்: ஸ்கூல் பைனல் அல்லது அதற்குச் சமமான பரீட்சை. ரிக்ரூட்டிங் உத்தியோகஸ்தர் தான் இதற்கும் ஆள் சேர்க்கிறார். இந்தப் பதவிகளுக்கு அபேட்சகர்களைக் கோரி ரிக்ரூட்மெண்ட் சப்-கமிட்டி காரியதரிசி சென்ற சில மாதங்களில் இரண்டு முறை விளம்பரம் செய்தார். முதன் முறை 2,000 மனுக்கள் வந்தன. தேவை 500 பேர்கள் மட்டுந் தான். இரண்டாம் முறை 1,200 மனுக்கள் வந்தன. இந்த வைசிராய் கமிஷன் ஆபீசர் பதவி மிகவும் நல்லதோர் கௌரவமான பதவி என்று அநேக இளைஞர்களுக்குப் பொதுவாகத் தெரியாது. முற்கூறிய தேவையான தகுதிகள் உள்ளவர்கள் வெகு இலகுவாக இந்தப் பதவியைப் பெறலாம். பிறகு, வேலையில் திறமைசாலியாய் இருந்தால், மன்னர்பிரான் கமிஷன் பதவிக்குக் கூட உயரலாம். நமது பழைய சுபேதார்களையும் சுபேதார் மேஜர்களையும் பொது ஜனங்களும் அரசாங்கமும் வெகுவாக மதித்தனர். மற்ற பதவிகளுக்கு ஆட்கள் சேர்ப்பதைவிட, இந்தப் பதவிகளுக்குச் சேர்ப்பது விரைவில் நின்றுவிடக் கூடும். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தை இழந்துவிடக் கூடாதென்று இளைஞர்களுக்கு நான் கூறுவேன்.

மன்னர்பிரான் கமிஷன் உத்தியோகஸ்தர்கள்

மன்னர்பிரான் கமிஷனுக்கு எப்படி உத்தியோகஸ்தர்கள் பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள் என்பது பற்றி சில நுட்பங்களைத் தெரிவிக்கிறேன். இது சம்பந்தமாக அநேகர் எதுவும் தெரியாமலிருக்கின்றனர். இதில் மூன்று பகுதிகள் உண்டு. அதாவது, இந்திய கப்பற் படை, இந்திய தரைப் படை, இந்திய விமானப் படை. இதன் மனு நமூனுக்கள் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடமும் 'ஏரியா கமாண்டர்' இடமும், மாகாண 'செலக்ஷன் போர்டிலும்' கிடைக்கும்.

இந்த நமூனுக்களைப் பூர்த்தி செய்து, முதலில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிற்கு அனுப்ப வேண்டும். அபேட்சகர் அரசாங்க உத்தியோகஸ்தராயிருந்தால், அவர் வேலை செய்யும் இலாக்காத் தலைவர் மனுவை, நேரே மாகாண 'செலெக்ஷன் போர்டு'க்கு அனுப்பி விடுகிறார்.

இந்திய மன்னர் அரசாங்க உத்தியோகங்களை விரும்புபவர்கள், அந்த அரசாங்க அதிகாரிகளின் அனுமதி பெற்ற பிறகு தான் மனுச்செய்து கொள்ள வேண்டும். அவர்களை உள்ளூர் இராணுவத் தலைவர்கள் நேரில் காணுவார்கள்.

ஜில்லா ரிக்ரூட்மெண்ட் கமிட்டியாரும், ஜில்லா கலெக்டரும், அல்லது இலாக்காத் தலைவரும் அபேட்சகர்களின் மனுக்களை ஏற்றுக் கொண்ட பிறகு, மாகாண 'செலெக்ஷன் போர்டு'க்கு அனுப்புகிறார்கள். அந்த போர்டார் அபேட்சகர்களை நேரில் ஆஜராகும்படி அழைக்கிறார்கள். மாகாண 'செலெக்ஷன் போர்டார்' அங்கீகாரம் பெற்றவர்கள் சம்பந்தமான தஸ்தாவேஜிகளை கடைசியாக, பெங்களூரிலுள்ள 5-வது 'ஜெனரல் ஹெட் குவார்ட்டர்ஸ் செலக்ஷன் போர்டு'க்கு அனுப்புகிறார்கள். அங்கேயும் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, விமானப் படைக்கும், தரைப் படைக்கும், கப்பற் படைக்கும் இன்னின்னார் என்று பிரித்து விடப்பட்டு, உத்தியோகஸ்தர்கள் பயிற்சிசாலைக்கு அனுப்பப் படுகிறார்கள். நல்ல பொது அறிவு இதற்குத் தேவை.

(12-ம் பக்கம் பார்க்க.)

"உழுதூண் விரும்பு"

"பூமி திருத்தி உண்"

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"**—திருக்குறள்.

நாகப்பட்டணம் நகர உணவுப் பொருள் கமிட்டி அங்கத்தினரான மிஸ்டர் ஆர். தியாகராஜன் அவர்கள், பி.ஏ., பி.எல்., எழுதியது.

தற்பொழுது நடந்து வருகிற பூமண்டல யுத்தத்தின் காரணமாய், நமது நாட்டில் வெகு மக்களுக்கு உத்தியோகங்கள் கிடைத்து வருவதையும் பல புதிய கைத் தொழில்கள் ஏற்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். தவிர, பெரும்பான்மையாக விவசாயிகள் கூடிய நமது தேசத்தில் உணவுப் பொருள் நெருக்கடி ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, விவசாய அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் பல முறைகளை பிரசாரம் செய்து வருகிறார்கள்.

மத்திய அரசாங்க உணவுப் பொருள் அபிவிருத்தி இயக்கத்திற்காக 2 கோடி ரூபாய் வரையில் செலவு செய்ய, திட்டம் போட்டிருக்கிறார்கள். சென்னை மாகாண அரசாங்கம் குளங்கள் வெட்டுதல், செப்பனிடுதல், பாசன தளங்களை அபிவிருத்தி செய்தல் இவைகளுக்காக பத்து லட்சம் ரூபாய் முதல் பன்னிரெண்டு லட்சம் வரையில் ஒதுக்கி இருக்கிறார்கள். மேலும் ஜில்லா விவசாய ஆபீசர் ஒவ்வொரு பட்டாதாருக்கும் அவருடைய சொந்த ஜாமீன் பேரில் ரொக்கமாகவோ உயர்ந்த தானிய விதைகளாகவோ எரு வகைகளாகவோ ரூபாய் ஐம்பது அளவுக்கு பெருமானம் உள்ளவற்றை கடனாகக் கொடுத்து உதவும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை அரசாங்கத்தார் தண்ணீர் வரியைக் குறைத்தும் காலியாக சாகுபடி இல்லாமல் இருக்கும் புறம்போக்கு முதலிய ஸ்தலங்களை மண்ணுக்குத் தக்கவாறு, தானியங்கள், காய்கறி, கனிவர்க்கங்கள் விளைவிக்கும் பொருட்டு அனுமதி அளித்து குறிப்பிட்ட அளவிற்கு பல வசதிகள் செய்து வருகிறார்கள்.

பொது ஜனங்களுக்கு யுத்த உணர்ச்சியும் நேச நாடுகள் வெற்றி பெற நமக்குள்ள கடமைகளையும் நாம் நன்குணர்ந்து அதற்குச் செய்ய வேண்டிய சகாயத்தையும் அது விஷயத்தில் உற்சாகத்தையும் அதிகப்படுத்துவதற்காக பாடுபட்டு வரும் தேசீய முன்னணி நிர்வாகஸ்தர்களும் பிரசாரகர்களும் நகரங்களிலும் கிராமங்களிலும் உணவுப் பொருள்களை ஜாஸ்தியாக விளைவிக்கும்படி மக்களுக்கு பிரசாரம் செய்யும்படி திட்டம் ஏற்பட்டிருக்கிறது.

திருவள்ளுவ நாயனரும், ஔவை பிராட்டியாரும் விவசாயத்தின் அவசியத்தை அதிவிமரிசையாய் அவர்களுடைய ஒப்பற்ற செய்யுள்களில் பாடி இருப்பது தமிழ் மக்களாகிய நமக்கு, மனதில் ஊறி இருக்கிறது. அப்பெரியோர்கள் மொழிகளை கடைப்பிடித்து நாம் உழைத்து வர, தற்சமயத்தைக் காட்டிலும் வேறு நன்னாள் கிடைத்தல் அரிது.

தவிர, நமது விவசாயப் பத்திரிகைகளிலும், தினசரி, வார பத்திரிகைகளிலும் இலவசமாக வழங்கப்படும் விவசாய இலாகா துண்டு பிரசுரங்களிலும் உணவுப் பொருளாக உபயோகப்படும் பயிர்கள், செடி, கொடி, மரம் வகையருக்களை ஜாஸ்தியாக விளையும்படி நாம் எவ்வாறு செய்யக் கூடும் என்பதைப் பற்றியும் அதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டப்பட்டு வருகின்றது. ரேடியோ மூலமாகவும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இவைகளைப் படித்து வருபவர்களும் கேட்டு வருபவர்களும் டி கருத்துக்களை பரவச் செய்து, ஒவ்வொரு குடும்பத்திலும் அவர்களால் இயன்ற அளவு அவர்களுக்கு கிடைத்த இடத்தில் உணவுப் பொருளை சாகுபடி செய்வது முக்கியம். உத்தியான வனங்களையும், சிங்காரத் தோட்டங்களையும் யுத்த காலத்தை முன்னிட்டு உணவுப் பொருள் பயிரிடமாக பல பிரமுகர்கள் மாற்றி வைக்கின்றார்கள். எல்லா பிரதேசங்களிலும் ஆடு மாடுகள் மேய வேண்டிய பாகம் நிலங்களாகவும், அவசியமாக களம் முதலிய வற்றிற்கு தேவையாக உள்ள இடம் நீங்கலாகவும், மற்றுமுள்ள பூரா இடத்தையும் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டியது நமது பொறுப்பு. அதில் எவ்வித பயிர் செய்யலாமென்று நமது விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களை நாம் கேட்டால், அவர்கள் நமக்கு வேண்டிய உதவி புரியச் சித்தமாய் இருக்கிறார்கள்.

உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்து வருவதைத் தடுத்து, ஏழை மக்களுக்கு கட்டும்படி நியாய விலைக்கு விற்கும்படியும், சிற்சில இடங்களில் அரிசி முதலியவற்றை பங்கிட்டுக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நம் நாட்டில் உணவுப் பொருள் நெருக்கடி ஏற்படாது என்று நாம் நம்ப ஹேதுக்கள் இருக்கின்றன. அதை நாம் தடுக்க உணவுப் பொருள்கள் உபயோகப்படுத்துவதில் சிக்கனமாக இருப்பதும் தவிர, வீண் செலவு செய்யாமலும் இருக்கவேண்டும். குறைவு பட்ட இடங்களுக்கு அதிக விலையுள்ள இடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் சீக்கிரமாக அனுப்பவும் போக்கு வரத்து சாதனங்களில் சிரமம் ஏற்படுவதை நிவர்த்திக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முடிவில் நமது மக்கள் உணவுப் பொருள் உற்பத்தி விஷயத்தில் "ஊக்கமது கைவிடேல்" என்றபடி பணி செய்வார்களாக! நம்மைத் தாங்கி வரும் நமது தாய் பூதேவி ஆதலால், அவள் நாம் பசிப் பிணியால் வருந்தாமல், போதிய அளவு உண்டு களித்து வரவேண்டிய பொருள்களை ஈன்று வரத் தயாராக இருக்கிறாள். நாம் அப் பூமியினிட மிருந்து நம் முயற்சியால் அப் பொருள்களை அடைவதே நமது லட்சியமாகும்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

டிசம்பர் 13-ம் தேதி கைப்பற்றியது. அப்போது நாங்கிங்கில் மகா கேவலமான அக்கிரமங்களை யெல்லாம் ஜப்பானியப் படைகள் செய்தன.

இதற்கு சற்று முன்னதாக சீனாவுக்கு சமரச நிபந்தனைகளை ஜப்பான் அனுப்பியது. சீனர்கள் ஷாங்ஹைக்குப் பின் வாங்கிப் போனதற்கும், ஜப்பானியர்கள் நாங்கிங்கைக் கைப்பற்றியதற்கும் இடையில், இந்த சமரச நிபந்தனைகள் மேலும் கடுமை யாகின. கடைசியாக எதிர்த்துப் போராட வேண்டுமே யொழிய இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று சியாங் முடிவு கட்டினார். யாங்ட்சி ஆற்றின்மேல் 1,000 மைல்களுக்கு வடக்கேயுள்ள சூங்கிங்கிக்குத் தன் தலைநகரத்தை மாற்றினார். 1938-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில், யாங்ட்சி யாற்றின் மத்திய பகுதியிலுள்ள சீன இராணுவ நிர்வாக ஸ்தலமான ஹாங்கோவையும் ஜப்பானியர்கள் கைப்பற்றி விட்டனர். ஆறு மாதப் போராட்டத்தில், ஹோபெய், சின்யுவான், ஷான்டுங், ஷான்சி ஆகிய வடதிசையிலுள்ள மாகாணங்களெல்லாம் ஜப்பானியர் வசமாயின

சீன யுத்தத்தில் நிகழ்ந்தவை பற்றி யெல்லாம் இங்கே குறிப்பிடுவது அவசியமில்லை. சீனர்களுக்குத் தகுந்தபடி விமான பலமும் பீரங்கி பலமும் கிடையாது. இது ஜப்பானியர்களுக்குச் சாதகமா யிருந்தது. 1939-ம் வருஷம் அக்டோபர் மாதத்திற்குள் சீனாவிலுள்ள முக்கியமான துறைமுகங்களையும் நகரங்களையும் ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அவை வருமாறு:—பீகிங், டெய்ன்ட்சின், ஷாங்ஹை, நாங்கிங், கான்டன், ஹாங்கோ.

சகிப்புத் தன்மைக்குக் கடும் பரீட்சை.

நன்கு அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு ஐரோப்பிய நாடுகளுக்குள்ளாக இப்படிப்பட்ட யுத்தம் ஏற்பட்டிருக்குமானால் எதிர்ப்பே யில்லாமற் போயிருக்கும். ஆனால் சீனாவோ ஒரு போதும் விட்டுக் கொடுக்காது. ஏனென்றால், அது பரந்த ஒரு வழிப்படாத நாடு. அதில் இன்னது தான் முக்கியமான கேந்திரஸ்தானம் என்றில்லை. கேந்திரஸ்தானமென்று ஏதேனு மொன்றிருந்து அதை ஜப்பானியர்கள் கைப்பற்றினால் தானே சீனா தோற்றது என்று சொல்லலாம். ஒரு விமர்சகர் சீன யுத்தத்தைக் குறித்துப் பேசும்போது, இது ஒரு வகையில் யுத்தத்தை விடச் சிறிது; மற்றொரு வகையில் பெரிது என்று கூறினார். அதாவது ஜப்பானியர்கள் ஹாங்கோவைக் கைப்பற்றிய பிறகு, போராட்டம் வெகுவாகக் குறைந்தது, சில இடங்களைக் கைப்பற்றும் பொருட்டு ஜப்பானியப் படைகள் முன்னேறிப் போகும் போது மட்டும், போர் நடந்தது; ஆகவே தான், இது யுத்தத்தை விடச் சிறிது என்று கூறினார். நிற்க சீன மக்களின் சகிப்புத் தன்மையை இந்தப் போராட்டம் சோதித்து விட்டது. எல்லா விடங்களிலும் போர் முனைகள் தான்; ஆனால் ஒரு இடத்திலாவது போராட்டம் நடைபெறுது. ஆகவேதான் இதை, யுத்தத்தை விடப் பெரிது என்று கூறினார்.

இதுபோலவே **1941-ம்** வருஷம் டிசம்பர்மீ 7உ வரை நடைபெற்றது. அப்போது 'பேர்ல்' துறைமுகத்தையும் மற்ற அமெரிக்கத் தீவுகளையும் ஜப்பானியப் படைகள் தாக்கின. அதன் மூலம் அமெரிக்காவை ஜப்பான் போருக் கிழுத்தது. அன்று தான் சீனாவும் இரண்டாவது உலக யுத்தத்தில் கலந்து கொண்டு ஜெர்மனி மீதும் இத்தாலி மீதும் போர் தொடுத்தது. அது முதல் சீன ஜப்பான் யுத்தமும் பாசிசத்தை ஒழிக்கும் உலக யுத்தத்தின் ஒரு பகுதியாக மாறியது.

கூடிய விரைவில் நேசநாடுகளெல்லாம் சேர்ந்து ஜப்பானைத் தாக்கக் கூடும். இதற்குத் தலைவராக **லார்ட் லூயி மௌன்ட்பாட்டன்** தலைவராக நியமிக்கப்பட்டு விட்டார். அவருடைய தலைமைக் காரியாலயம் நியு டில்லியிலிருக்கும்.

பல திசைகளிலிருந்தும் ஜப்பான் வளைக்கப்படுகிறது. இதுபற்றி சென்ற செப்டெம்பர் மாதம் 17-ம் தேதி **மிஸ்டர் ரூஸ்வெல்ட்** அமெரிக்க அரசாங்க சபைக்கு விடுத்திருக்கும் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்:—"ஜெனரல் டோஜோவும் அவருடைய கொள்ளைக்காரக் கூட்டமும் கீழ்திசையிலாவது மேல்திசையிலாவது தமது நோக்கத்தைச் செலுத்தக் கூடும். ஜெனரலாசிமோ ஷியாங்-கெய்-ஷேக், ஜெனரல் மெக்கார்தர், அட்மிரல் நிமிட்ஸ், அட்மிரல் லார்ட் லூயி மௌன்ட்பாட்டன் ஆகியோரின் படைகள் தம்மை வளைகின்றனவென்று அவர்களுக்குத் தெரியும். ஐரோப்பாவிலுள்ள ஜெர்மனியை நிர்தூளாக்கும் படைகளெல்லாம் ஒன்றிற் கொன்று எப்படி சம்பந்தம் கொண்டிருக்கின்றனவோ, அது போலவே பசிபிக் சமுத்திரத்திலுள்ள பல போர் முனைகளிலு முள்ள நேசநாட்டுப் படைகளும் ஒன்றிற்கொன்று சம்பந்த முடையவை. சீனப் போராட்டம் உலக விடுதலை போராட்டமாக மாறி விட்டது. ஜப்பானிய பூதத்தினின்று அது விரைவில் மீளும்.

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

இராமநாதபுரம்.

தற்பொழுது நடந்து கொண்டிருக்கும் உலக மகா யுத்தத்தில் பொது ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் பல. அவைகளில் உண்ண உணவின்றி உடுத்த ஆடையின்றி கஷ்டப்படும் மக்கள் பலர். இதை உத்தேசித்து நமது அரசாங்கத்தார் செய்யும் பொது ஜன சேவையில் இதை முக்கியமாக எடுத்து கொண்டிருக்கின்றனர். இந்தச் சேவையை நிறைவேற்றுவதற்காக பல ஆபீஸர்களை நியமித்து அரிசி, மற்ற தானியங்கள், சர்க்கரை, மண் எண்ணெய் முதலிய வஸ்துக்கள் எல்லோருக்கும் சமமாக கிடைப்பதற்கு கூப்பன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏழை ஜனங்கள் கஷ்டப்படாதவாறு 'ஸ்டான்டர்டு கிளாத்' என்னும் ஒருவித துணியை வெளியிட்டு ஏழை மக்களின் பஞ்சத்தைப் போக்கடிக்கின்றனர். எல்லா வஸ்துக்களும் சரியாக பொது ஜனங்களுக்கு கொடுக்கப்படுகிறதா என்பதை ஒவ்வொரு ஆபீஸரும் விசாரித்து அப்படி நடக்காதவர்களை தண்டனைக்குள்ளாக்குகிறார். இன்னும் பொது ஜனங்களுக்கு அதிகத் தான்யம் பயிரிடவும், காய்கறிகளை விருத்தி செய்யவும், நிலங்களைச் சாகுபடி செய்யவும், நிலம் இல்லாமல் தவிக்கும் ஏழை மக்களுக்கு நிலங்கள் கொடுத்தும் உதவுகின்றனர். தாலூக்காக்களில் எல்லாம் ஓர் சபையை ஏற்படுத்தி விலைவாசிகளை நிர்ணயிக்கவும், அதன்படி நடக்கத் தவறியவர்களை தண்டிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஏற்பாடுகளினாலும் அரசாங்கத்தின் இவ்வித உதவியினாலும் பல ஏழை மக்களின் கஷ்டங்கள் நிவர்த்தியாகின்றன.

கோயமுத்தூர்

கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலூகா, அம்மாபேட்டையில், நாளது வருஷம் ஸெப்டெம்பர் மாதத்தில் ''ஏழைகளின் உணவுப் பொருள்கள் டிபோ'' அரசாங்கத்தாரால் திறந்து வைக்கப்பட்டது. அவனாசி தாலூகா, மேட்டுப்பாளையம் டவுனில் இந்த மாதம் முதற்கொண்டு அரிசி பங்கீடுச் சீட்டுக்கள் ஒவ்வொரு குடும்பத்தின் மொத்த ஆட்களின் எண்ணிக்கையை அனுசரித்து, கொடுக்க ஏற்பாடாகி யிருக்கிறது. இந்த ஜில்லாவில் உணவுப் பொருள் விளைவை அதிகரிக்க, குடியானவர்களுக்கு வேண்டிய அளவு அரசாங்கத்தார் உதவி செய்து வருகிறார்கள்.

கோவை விக்டோரியா டவுன் ஹாலில் திறக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள் டிபோவில் ஏழை மக்களுக்கு, ராகி, சோளம் முதலிய தானியப் பொருள்கள் சரசமான விலையில் விற்கப்பட்டு வருகின்றன. தவிரவும் அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட கடைகளிலிருந்தும் டவுன் ஜனங்களுக்கு சௌகர்யமாக வாரத்திற்கு ஒரு முறை, இரண்டரை ரூபாய்க்கு பச்சையரிசியும், புழுங்கலரிசியும் கொடுக்கப்பட்டு வருகிறது. கோவைக்கு அருகாமையிலுள்ள கணபதி கிராமத்தில் சில பணக்காரக் குடியானவர்கள் ஏழைகளின் உதவிக்காக சல்லிசமான விலையில் உணவுப் பொருள்கள் விற்க ஒரு கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். யுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் குடும்பத்தாருக்கு தாராளமாக உணவுப் பொருள்கள் கிடைக்கும்படி அரசாங்கத்தார் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

மண்ணெண்ணெய் உபயோகத்தை சிக்கனப் படுத்த மண்ணெண்ணெய் இல்லாமலும் எரியக்கூடிய ''ராம தீபம்'' என்னும் ஒரு புதிய விளக்கைக் கண்டு பிடித்து, ஒவ்வொரு தாலூக்காவிலும் சொற்ப விலையில் ஜனங்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

வியாபாரிகள் தங்கள் இஷ்டப்படி துணி மணிகளை அதிக விலைக்கு விற்காமலும், எல்லா ஜனங்களுக்கும் சௌகரியமாகவும் இருக்க ''ஸ்டாண்டர்டு கிளாத்'' என்னும் ஒரு ரகத் துணியை, முக்கியமாக ஏழை மக்கள் வாங்கக் கூடியபடி விலையை நிர்ணயித்து, துணிகளை விற்று வருகிறபடியால், ஜனங்களுக்கு துணிக் கஷ்டம் என்பது நிவர்த்தியாகி விட்டது என்று சொல்லலாம்.

கோவை ஜில்லா வாசிகள் இப்போது சேமித்து வைப்பதின் அவசியத்தையும் அவற்றை செவ்வனே ''தற்காப்புப் பத்திரங்களி''ல் பதிவு செய்து வைப்பதின் முக்கியத்தையும், அறிந்திருக்கிறார்கள்.

சேலம்

ரிவின்யு அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதன் பயனாக, தேவைக்கதிகமாக உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்க முடியாமற் போய்விட்டது. எனவே, இந்த ஜில்லாவின் பல பகுதிகளில் உணவு நிலைமை சற்று முன்னேற்ற மடைந்திருக்கிறது. உணவுப் பொருட்களை நியாயமான விலைக்கு விற்கும் பொருட்டு, சேலத்தின் பல பகுதிகளிலும், வெளியூர்களிலுமுள்ள முக்கியமான இடங்களிலும் டிப்போக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சேலம் பட்டணம் சம்பந்தப்பட்டவரை ஒரு தாசில்தார், 3 டிபுடி தாசில்தார்கள், 6 ரிவின்யு இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர்களை இதற்காக நியமித்திருக்கிறார்கள். இவர்கள் பொது மக்களுக்குப் பங்கீடுச் சீட்டுக் கொடுக்கப்படுவதை மேல் பார்க்கவும் திருத்தவும் வேண்டும். சென்ற வாரம் மாகாண பங்கீடு உத்தியோகஸ்தரான மிஸ்டர் க்ரப்ஸ் சேலத்திற்கு விஜயம் செய்து உணவு நிலைமை பற்றிய நுட்பங்களை ஆராய்ச்சி செய்து கொண்டு போனார். ஸ்ரீமதி ஜே. ஆர். பெட் அவர்களின் முயற்சியின் பயனாக, சேலம் பட்டணத்திலுள்ள பிச்சைக்காரக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1943-ம் ஸ்ரீ செப்டெம்பர்மீ 19உ முதல் அவர்களுக்கு உணவளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென்று ஒரு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டிக்கு திவான்பகதூர் கே. சுந்தரம் செட்டியார், தலைவர்; ஸ்ரீமதி பெட், உபதலைவர்.

ஏராளமாகச் சரக்குகளைக் கட்டி வைத்திருக்கும் கிராம வாசிகளிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் அவற்றைத் தருவித்து, ஏழைகளுக்கும் நியாய விலைக் கடைகளுக்கும் புஞ்செய் தானியங்களையும் அரிசியையும் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் திருப்திகரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. தாலூக்கா ஆலோசனைக் கமிட்டியார் விதிக்கும் விலைப்படிதான் இந்த 'டிப்போ'க்களில் இவை விற்கப்படுகின்றன. நெசவுத் தொழிலாளர்கள் ஏராளமாகவுள்ள சில வெளியூர்கள் தவிர, மற்ற எல்லா விடங்களிலும், தன் தினசரிச் செலவிற்குச் தேவையான அரிசி கிடைக்காமல் திண்டாடிய காலம் மாறி விட்டது. பரமாத்தி, போத்தனூர், அனங்கூர் ஆகிய ஊர்களில், எல்லோருக்கும் சமமாக விநியோகிக்கப்பட வேண்டி, அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டிருகின்றன.

போதுமான பருவ மழை இல்லை என்றாலும் பயிர்கள் நல்ல நிலைமையி லிருப்பதாகச் சொல்லலாம். கம்பு, சோளம், சாமை ஆகியவை அறுவடையான பிறகு, கிராமவாசிகளுக்கும் விவசாயத் தொழிலாளருக்கும் உணவுப் பொருள் கிடைக்கலாம். முக்கியமான உணவு தானியங்களின் விலை உயர்ந்துள்ள அளவிற்கு, கூலி விகிதமும் உயர்ந்திருக்கிறதென்று சொல்லலாம். சில இடங்களில் ரொக்கமாகக் கூலி கொடுப்பதற்குப் பதிலாக, தானியமாகவே கொடுக்கப்படுகிறது. இவற்றை தடுப்பதற்கு பலமான, பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மழையில்லாத காரணத்தால், அதிகப்படியாக உணவுப் பொருள்களைச் சேர்த்து வைக்க பிரஜைகள் நினைக்கிறார்கள். இந்த நினைவுகளுக்கு இடங்கொடுக்காதபடி தடுக்க, நியாயமான முறையில் எல்லா வகைகளிலும் முயற்சிக்கப்படுகிறது. கைத்தறித் தொழில் நிலைமை சற்று சௌகரியமாயிருக்கிறது. அநேக கைத்தறித் தொழிலாளிகளுக்கு வேலையில்லாது போகக் கூடிய நிலைமை ஏற்படுமானால், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், அரசாங்கத்தார் நடத்தும் கூட்டுக் கைத்தறி நெசவு 'சென்டர்'கள் மூலமாகவும் அந்த நெசவாளிகளுக்கு உதவியளிக்கப் படுகிறது. 'ஸ்டாண்டர்ட்' துணிகளில் பல வகைகள் வந்துவிட்ட பிறகு, நியாயமான விலைக்கு பொதுமக்களுக்குத் துணி கிடைக்கிறது. ஆனால் கிராமப் புரங்களிலுள்ளவர்களுக்கு இன்னும் இந்த நன்மைகள் கிடைக்க வில்லை.

மண்ணெண்ணெய், விறகு முதலியவை சம்பந்தமாக எந்த வகைக் கஷ்டமும் கிடையாது.

அதிகமாக உணவுப்பொருட்கள் உற்பத்தி செய்யவேண்டியதைப் பற்றி தேசியப் போர்முனையாளர்கள், ரிவின்யு உத்தியோகஸ்தர்கள், கூட்டுறவு விவசாய இலாகாக்காரர்கள் ஆகியோர் பலமான பிரசாரம் செய்தார்கள். அதன் பலனாக, இந்த ஜில்லாவில் சாகுபடி செய்யப்படாமல் தரிசாகக் கிடந்த நிலங்களில், உணவுப் பொருள்கள் சாகுபடி செய்யப் படுகின்றன.

மீட்சிக்கு வழி

போராட்டத்தில் களைத்தவர்களுக்கு ஊக்கம்

இராணுவ ஆஸ்பத்திரிகள் வசதி நிதியிலிருந்து, பெங்களூர் இராணுவ ஆஸ்பத்திரிகளுக்கு 1942-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் 1943-ம் வருஷம் ஜூலை மாதம் வரை 1,095 புத்தகங்களும், 2,460 கஜம் தென்னை நாரினால் செய்யப்பட்ட பாயும், 274 பிரம்பு நாற்காலிகளும் மற்றும் பலவும் வழங்கப்பட்டிருக்கின்றன.

நோயாளியாக கொஞ்சகாலம் அங்கே இருந்திருப்பீர்களானால், நோய் குணப்படுகிற பருவத்தில் எவ்வளவு அக்கரையோடு கவனிக்கப்படுகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியும். சாதாரணமாக அரசாங்கத்தார் வழங்காத பல வசதிகளை இராணுவ ஆஸ்பத்திரிகள் வசதி நிதியிலிருந்து வழங்குகிறார்கள்.

இதற்கு, படையினர் நோய் நீங்கிய பிறகு, உடல் வலுப் பெறுவதற்கு அவரவர்களுக்கு என்னென்ன தேவை என்று உணர்ந்து, அதற் கேற்றபடி செய்யவேண்டும். போராட்டத்தினால் மனத்தளர்ச்சி யடைந்துள்ளவர்களுக்கு எல்லா விதப் புத்தகங்களும் ஆறுதலளிக்கும். ஆட்டங்களில் 'ஹாக்கி' முதல் 'பாட்மின்டன்' வரையிலும், 'ட்ராட்ஸ்' முதல் 'டோமினோஸ்' வரை ஆடலாம். மற்றும் இந்தியப் படைகள் தம் கிராமங்களில் ஆடும் ஆட்டங்களையும் ஆடலாம்.

அவர்கள் துணிகள் பின்னுகிறார்கள். இதில் அவர்களுக்குப் பழக்கம் ஏற்பட்டபிறகு, இது தமக்கொரு தொழிலாக எதிர்காலத்தில் உதவும் என்றும் நினைக்கிறார்கள்.

கிராமபோன், தந்தியில்லாக் கம்பி இயந்திரங்கள், உணவருந்தும்போது உபயோகிக்கப்படும் முள் முதல் கப்பலில் போட்டு சாய்ந்து கொள்ளும் நாற்காலி வரை, ஜமுக்காளம் முதல் விளக்கின் மேல் மூடிவரை, சீப்பு முதல் எலெக்ட்ரிக் விசிறி வரை, நோயாளிகளுக்குத் தேவையான பலவகைப் பொருட்களும் வழங்கப்படுவதனால், அவர்கள் மனம் குளிர்ந்து விரைவில் குணமடைகிறார்கள்.

திமிர் பிடித்த பேச்சு!

இப்பொழுது என்ன ஆச்சு ?

இந்த உலகத்திலே சிலர் இருக்கிறார்கள். அவர்கள் பைகளிலே நாலு காசு ஏறிவிட்டால் போதும், அவர்களுடைய பேச்சே ஒரு தினுஸாக மாறி விடும், அவர்களுடைய போக்கும் அம்மாதிரியே ஆகிவிடும். வழியிலே ஒரு ரிக்ஷாக்காரனைப் பார்க்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். 'அடேய்! இங்கே வாடா!' என்று அதிகாரத்தோடு அழைப்பார்கள்.

'எங்கே போவுனும் ஸாமி?' என்று கேட்பான் ரிக்ஷாக்காரன்.

'எங்கே போனா உனக் கென்னடா கயிதை? வண்டியைக் கீழே வைடா! என்று முடுக்காகப் பேசுவார்கள்.

'ஸரி தான் ஸ்ஸாமி! எறு ஸ்ஸாமி!' என்பான் ரிக்ஷாக்காரன்.

ஜோராகக் கால் மேலே கால் போட்டுக் கொண்டு உட்காருவார்கள் ரிக்ஷாவிலே.

தடபுடலாக பெரிய ஹோட்டலில் போய் இறங்குவார்கள். சாதாரணமாக ஒரு அணா கொடுக்கிற தூரத்துக்கு நாலணா எடுத்து, 'ஸ்டைலாக ரிக்ஷாக்காரனிடம் வீசி விட்டு, அவனைத் திரும்பிக் கூடப் பாராது ஹோட்டலுக்குள் புகுவார்கள்.

'யாரப்பா பையன் இந்த டேபிளுக்கு?' என்று சப்தம் போட்டுக் கேட்பார்கள். பையன் ஓடிவருவான்.

'என்ன வேணும் ஸார்?'

'என்னென்லாம் இருக்கு? ஒஸ்தியான 'ஸ்வீட்டிலே' என்ன இருக்கு? கொண்டா ஒரு பிளேட்!' என்று 'ஆர்டர் செய்வார்கள்.

இந்தப் புத்தி முன்பே இருக்க வேண்டும்.

இதே மனுஷர்களின் பை கனம் குறைந்து விட்டால் அப்பொழுது பேச்சு, குணம் எல்லாமே மாறிவிடும். ஒரு மைலானாலும நடக்கத் தொடங்குவார்கள். 'ஒரு இட்லி, அரை கப் காபி' என்று தண்ணீர்ப் பந்தல் ஹோட்டலில் போய் உட்கார்ந்து கொண்டு கேட்பார்கள். பழைய ரிக்ஷாக்காரன் இம்மாதிரி ஆட்களைப் பார்த்து விட்டால், 'என்ன ஸ்ஸாமி! ஐயே! நடந்தா போறே?' என்று தைரியமாகக் கேலி செய்ய ஆரம்பித்து விடுவான். இதனாலே தான் நாலு காசு வந்ததும் துள்ளி விழக்கூடாது. கொஞ்சம் புகழ் ஏற்பட்டதும் மண்டை கனத்துப் போகக் கூடாது என்று பெரியவாள் சொல்லி யிருக்கிறார்கள். அநுபவம் இல்லாமலா அப்படி சொல்லி யிருக்கிறார்கள்? அதை இக்காலத்தவர்களிலே பலர் தெரிந்து கொள்ளுவதில்லை. தாங்களே அநுபவித்து அவஸ்தைப் பட்டு, தலைக்கு மேலே போன பிறகு தான், 'ஐயோ! எண்டா அப்பொழுது அப்படி தலை கீழே விழுந்து போனேம்!' என்று வருத்தப்படுகிறார்கள். அப்பொழுது வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? இந்த புத்தி முன்னாலேயே ஏற்பட்டிருக்க வேணும்.

பொதுவாகப் பேசுவானேன்? இன்றையத் தேதியிலே, இந்த உலகத்திலே, மேலே சொன்ன விஷயங்களுக்கு பெரிய உதாரணமாக விளங்குகிறவர்கள், ஹிட்லர், முஸோலினி மற்றும் அவர்களை ஏதோ பெரிய தெய்வாம்சங்களென நம்பி வந்தவர்கள் ஆகியோர் தான்.

யுத்தம் ஆரம்பமாகி இரண்டு வருட காலத்திற்குள், அவர்கள் பிரமாதமான வெற்றிகளைப் பெற்றார்கள் என்பது வாஸ்தவம். போன மகா யுத்தத்தில் ஜெர்மானியரும், அவர்களது சகாக்களும் ஆரம்பத்தில் அடைந்த வெற்றிகளைப் போல, பல மடங்கு அதிகமான வெற்றிகளை இப்பொழுது அடைந்தார்கள். அவர்கள் போகும் வேகத்தைப் பார்த்து பயப்படாதவர்கள் யாருமே இல்லை. அதைப் பார்த்த ஹிட்லர் கோஷ்டியாருக்கு அளவு கடந்த ஆனந்தம் தாங்க முடியாது போய் விட்டது.

நம்மை இடித்துக் காட்டுவார்களே என்ற யோசனையில்லை.

நினைத்தால் ரேடியோ முன்னால் போய் உட்கார்ந்து விடுவார்கள். வாயில் வந்ததெல்லாம் பேசுவார்கள். 'அடே! வாயிலிருந்து உதிர்க்கும் வார்த்தைகளை, திரும்ப வாயில் எடுத்துப் போட்டுக் கொள்ள முடியாதே? அவற்றை எத்தனையோ பேர்கள் குறித்து வைத்துக் கொள்வார்களே! நாளையும் நமது நிலைமை, இன்றைய நிலைமையைப் போலிராதே! அப்பொழுது எல்லோரும் நம்மை இடித்துக் காட்டுவார்களே!' என்ற யோசனையே அவர்களுக்கு இல்லை. என்ன பேச்சுப் பேசினார்கள் ஐயா! போன இடங்களில் எல்லாம் என்ன ஆட்டம் ஆடினார்களய்யா! உலகத்தையே சுருட்டி, கட்கத்தில் வைத்துக் கொண்டு கடலுக்குள் மறைந்தானுமே ஒரு ராக்ஷஸன்; அம்மாதிரி இந்த உலகத்தையே கௌவிப் பிடித்துக் கொண்டு, எங்கும் தமது கொடியைப் பறக்க விடலாம் என்று கனவு கண்டார்களய்யா! ஏழை மக்களை என்ன பாடுபடுத்தினார்களய்யா!

அப்பொழுது ஒருவர் ஜெர்மன் ரேடியோவிலே சொன்னார். "ஜெர்மானியரது சக்திக்கு ஈடான சக்தி, இனி இந்த உலகத்திலே யாருக்கும், எப்பொழுதும் ஏற்படப் போவதே இல்லை. அவர்களை எதிர்ப்பவர்கள், பொங்கிப் பாய்ந்துவரும் பிரவாகத்தை ஒரு கூடை மணலைப் போட்டுத் தடுக்க முயலுபவன் அடையும் பலனையே அடைவார்கள். அவர்களுடைய மனைவிமார்கள், தங்கள் அருமைப் புருஷர்களுடைய கருகிய உடல்களைத் தான் காணப்போகிறார்கள்" என்றார்.

இன்னும் சில அதிகாரிகள், ஹிட்லரின் திட்டங்களிலே பிரமாதமான நம்பிக்கை வைத்து ஸ்வீடன் தேசத்தில் உள்ள பல கம்பெனிகளுக்கு எழுதி, அழகான பளிங்குக் கற்களுக்கு பெரிய பெரிய 'ஆர்டர்' கள் கொடுத்தார்களாம். எதற்கு?

வெற்றிகளைக் கொண்டாடி, ஆங்காங்கே வெற்றிச் சின்னங்களை நாட்டி, அவற்றிலே இந்தப் பளிங்குக் கற்களில் தேதி செதுக்கி பதித்து வைக்கத் தான். அந்த ஆர்டர்களை யெல்லாம் இப்பொழுது அவர்கள் ரத்து செய்து விட்டார்களாம். வேண்டுமானால், அடிபட்ட தேதிகளைச் செதுக்கி, ஆங்காங்கே நட்டு வைத்து விட்டுப் போகலாம். எதிர் கால சரித்திரக் காரர்களுக்கு அவை வெகுவாகப் பயன்படலாம்.

நாஜி வீரர்கள் அட்டூழியம்.

நாஸி வீரர்கள் ஒவ்வொரு இடங்களிலும் என்னென்ன அட்டூழியங்களைச் செய்திருக்கிறார்கள் தெரியுமா? பெண்களைக் கற்பழிப்பதும், வீடுகளை நாசம் செய்வதும், ஒரு பாவமும் அறியாதவர்களைச் சுட்டு வீழ்த்துவதும், கலைப் பொக்கிஷங்களைப் பாழாக்குவதும் அவர்களுக்கு தமாஷாக இருந்திருக்கின்றன.

கலை என்ற பெயரைக் கேட்டாலே, ஹிட்லரின் சகாவான கொயரிங் துரைக்குப் பிடிக்காது. கலைக் கோவில்களை நாசமாக்கும்படி அவர் விமானப் படையினருக்குக் கட்டளை யிடாத நாளே கிடையாதாம். அவர் ஒரு முறை ரேடியோவிலே சொன்னார்: "கலை என்ற பதம் என் செவிகளிலே விழும்பொழுதெல்லாம், என் கை தன்னையு மறியாமலே ரிவால்வர் இருக்கு மிடத்தைத் தேடிப் பாய்கிறது' என்று.

சமீபத்திலே டாகன்ராக் என்ற இடத்தை ருஷ்யர்கள் திரும்பப் பிடித்தார்கள் அல்லவா? அந்த நகரம் நாடகக் கலைக்கு ஒரு இருப்பிடம் போலிருந்தது. அதை யெல்லாம் நாஸிகள் பாழாக்கி விட்டார்கள்.

2 கோடி புத்தகங்கள் நாசமாயின.

லண்டனிலேயும் அம்மாதிரியே பல கலைகளின் இருப்பிடங்களைத் தரை மட்டமாக்கி விட்டார்கள். அவர்களது குண்டு வீச்சால், இரண்டு கோடி அருமையான புஸ்தகங்கள் நாசமாகி யிருக்கின்றன என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இது ஒரு ராக்ஷஸ வெற்றிதான், கலைக் கொலைஞர்கள் என்ற பட்டத்தை நாஸிகள் தாராளமாக இதற்காகப் பெறலாம்.

இம்மாதிரி அவர்கள் அந்தக் காலத்தில் பேசியதும், நடந்ததும் எந்நாளும் உலகோர் மனங்களில் நன்றாகப் பதிந்திருக்குமே? ஆனால், நாஸிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் மட்டும் பழைய கதைகளை மறந்துபோயிருக்கிறார்கள்.

அவர்களுடைய திமிர் பிடித்த பேச்சு எல்லாம் போய் இப்பொழுது என்ன ஆச்சு பார்த்தீர்களா? ருஷ்ய மாதர்களுக்கு ஜெர்மானியர் சொன்ன பேச்சு, ஜெர்மானியருக்கே உண்மையாக அமையப் போகிறது, ருஷ்யாவிலே ஜெர்மானியர் நாய் பட்ட பாடு படுகிறார்கள்.

"உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா, அதுவும் போச்சுடா அரோஹரா!" என்று சொல்வதுண்டு. அந்த மாதிரி, ருஷ்யாவிலே கிடைத்த வெற்றிகள் எல்லாம் போய், ருஷ்யர்கள் ஜெர்மானியரைத் துரத்திக் கொண்டு ஜெர்மனிக்குள்ளேயே புகுந்து விடுவார்கள் போலிருக்கிறது.

ஜெர்மானியரைப் போல் யாரும் பின்வாங்க முடியாது

ஜெர்மானியர்களைப் போல் யாராலும் தைரியமாக எதிர்த்து நிற்கவோ, மேலே பாய்ந்து போராடிச் செல்லவோ முடியாது என்றிருந்த பெயர் எல்லாம் போய், ஜெர்மானியரைப் போல, யாராலும் பின் வாங்க முடியாது என்ற பெயர் ஏற்பட்டு வருகிறது.

இரண்டு வருட காலமாக, அவர்கள் ஏக தடபுடலாகக் காப்பாற்றி வந்த ஸ்மாலன்ஸ்க் என்ற முக்யமான நகரத்தை, போன வாரம் அவசர அவசரமாகக் காலி செய்து விட்டு ஓடி விட்டார்கள். ஏதோ ஒரு புயல் காற்றிலகப்பட்டு சீர் குலைந்து போன நகரம் போல் காணப்பட்டதாம் அந் நகரம். அங்கே நாசமாகாத வீடுகளை விரல் விட்டு எண்ணி விடலாமாம்.

ஏனய்யா காலி செய்தார்கள் அந்த நகரத்தை? ருஷ்யர்கள், முன்பு ஜெர்மானியர் கற்றுக் கொடுத்த பாடத்தை இப்பொழுது நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டதால் தான். அது என்ன பாடம்? இடுக்கித் தாக்குதல்; எதிரிப் படைகளுக்குப் பின்னால் பாரசூட் படைகளைக் கொண்டு இறக்குதல் போன்ற பாடங்கள் தான்.

சூறாவளி யென ருஷ்யாவிற்குள்ளிருந்து, புற்றிலிருந்து புறப்படும் ஈசல்களென ருஷ்யப் படைகள் ஜெர்மானியர் மீது பாய்ந்து வருகின்றன. ஜெர்மானியர்களால் ஒரு இடத்திலாவது சமாளித்து நிற்கவே முடியவில்லை. எங்கே சுற்றி வளைத்துக் கொண்டு விடப் போகிறார்களோ என்ற பயம், அவர்களைப் பிடுங்கித் தின்று கொண்டிருக்கிறது.

ஜெர்மன் அரண் பிளந்து விட்டது

தெற்கே கியெவ் என்ற பட்டணத்தைக் கூட விமானங்களையும் உதவியாகக் கொண்டு, காலி செய்து வருகிறார்களாம். பேஷ்! ருஷ்யாவிலே ஏற்பட்ட ஜெர்மன் அரண் நன்றாகப் பிளந்து போய் விட்டதென்றே கொள்ளலாம். கான்கிரீட்டால் கட்டப் பெற்ற வீட்டின் மேல் தளத்திலே, பத்து இடங்களிலே வெடிப்பு ஏற்பட்டு விட்டால், அப்புறம் அந்த மேல் தளத்தை செப்பனிட முடியுமா? தளத்தையே இடித்துத் தள்ளி விட்டுத் தான் வேறே கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். அதே மாதிரி ருஷ்யாவிலே ஜெர்மானியரது அரண் பிளந்து போய் விட்டது. இனி அவர்கள் புதிதாக அங்கு அரண் கட்டுவதென்பதும் நடக்கப் போகிற காரியமில்லை. ருஷ்யாவை ஜெயிக்கலாம் என்றோ, ருஷிய மண்ணில் ஒரு பகுதியைப் பெற்று, அதிலே குடியேறி வாழலாம் என்றோ எண்ணுவதற்கே இனி இடமில்லை. 'ஒரு ஊசி குத்தக் கூட இடம் கொடுக்க முடியாது இந் நாட்டிலே!' என்று துர்யோதனன் அக்காலத்திலே சொன்ன சொல்லை மட்டும், இப்பொழுது எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம். ஜெர்மானியருடைய சவங்களுக்கு வேண்டுமானால் ருஷ்ய மண்ணில் இடம் கிடைக்குமே ஒழிய, உயிருடன் இருப்பவர்கள் ஜெயசீலர்களென அங்கு நிற்க ஓரடி மண் கூடக் கிடையாது.

ருஷ்யர்கள் ஜெர்மானியரைத் துரத்திக் கொண்டு, நீப்பர் நதிக்கரையை அடைந்து விட்டார்கள். அவர்களில் சிலர், அந் நதியைக் கடந்து, மேல் கரைகளிலே கூட இடம் பிடித்துக் கொண்டிருக்கிறார்களாம். வடக்கே, ஸ்மாலன்ஸ்க் நகரத்திற்கு மேற்கே ருஷ்யர்கள் முன்னேறிய வண்ணமாக இருக்கிறார்களாம். வெள்ளை ருஷ்ய எல்லையைக் கூடக் கடந்து விட்டார்களாம். போலந்தின் எல்லையிலிருந்து அவர்கள் இருக்குமிடம் சுமார் எண்பது மைல்கள் கூட இல்லை.

ஹிட்லர் வருண ஜெபம் செய்யலாம்

இப்பொழுது ஜெர்மானியர்கள் ஒவ்வொரு இடத்தையும் சுட்டுப் பொட்டலாக்குவதில் தான் கவனம் செலுத்துகிறார்களாம். ருஷ்யாவில் மழை சீக்கிரம் பெய்யாதா என்று ஹிட்லர் வருண ஜெபம் கூடச் செய்யக் கூடும். அந் நாட்டில் உள்ள பயிர்கள் எல்லாம் மழை யில்லாமல் வாடுகிறதே வாடுகிறதே என்ற கவலையால் அவர் வருண ஜெபம் செய்யமாட்டார். மழை வந்தாலாவது, கொஞ்சம் ஓய்வு கிடைக்குமே! ருஷ்யர்களின் முன்னேற்றவேகம் குறையுமே என்று தான் அவர் எதிர் பார்ப்பார்.

ஆனால் மழை வருமுன் ருஷ்ய மண்ணில் போர் நடப்பதும் நின்று போய்விடக் கூடும். ஹிட்லர் எந்நாளும் விரும்பாத ஒரு விஷயம் நடக்கக் கூடும். அது என்ன விஷயம் தெரியுமா? 'கூடியவரை அயலார்

நாடுகளிலேயே யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்க வேண்டும். அசல் ஜெர்மனிக்குள்ளே யுத்தம் புகாதபடி பார்துக்கொள்ளவேண்டும்' என்பதே அவரது விருப்பம். அதன்படியே எல்லாம் இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன் நடந்து வந்தது. வரவர அவரது எண்ணங்கள் எல்லாம் உருவற்றுப் போய்க்கொண்டிருக்கின்றன. ஜெர்மனிக்குள்ளேயும் யுத்தம் புகுந்துவிடும் போல் தானிருக்கிறது.

நேசதேசத்தவர்கள் இத்தாலியில் கால் வைத்ததிலிருந்து, ருஷ்யாவில் ஜெர்மனியர் போடும் சண்டையின் உக்ரமே தணிந்துவிட்டது என்று சொல்லலாம். எங்கும் நிலையாக நின்று போராடாது, ஆட்களின் உயிர்களைக் காக்கும் ஒரே நோக்கத்துடனேயே அவர்கள் பின் வாங்குகிறார்கள். இத்தாலிக்கு பெருவாரியான படைகளை ஹிட்லர் கொண்டு வந்து விட்டார். அவ்வளவுக்கவ்வளவு ருஷ்யர்களுக்கு சௌகரியந்தானே? ஸ்டாலின் கேட்டு வருவதும் இதுதானே?

ஹிட்லர் மானம் கரைகிறது.

தனது மானம் தினம் விடிந்தால் சில்லறையாகக் கரைந்து போய்க் கொண்டிருப்பதை ஹிட்லர் பார்த்துக் கொண்டேயிருக்கிறார். முஸோலினியை கடைசி காலத்தில் காப்பாற்றி, அருகிலே கொணர்ந்து வைத்துக் கொண்டு, கட்டி அழுது, அவருக்கு போலி பலத்தையும், அதிகாரத்தையும் கொடுத்து வருகிறார். அந்த முறுக்கான ஸலாம்கள் எல்லாம் எங்கே போச்சு! முன் மாடியில் நின்று கர்ஜனை செய்ததெல்லாம் எங்கே போச்சு! ஹிட்லர் முஸோ சந்திப்பென்றால் உலகோர் கொண்ட ஆவல் எல்லாம் எங்கே போச்சு! இப்பொழுது இடிந்து போய் ஹிட்லர் எதிரிலேயே உட்கார்ந்திருக்கிறார் கிழட்டு முஸோ. இனி அவர் ஒரு நடைப் பிணம்தான்! ஹிட்லர்-முஸோ சந்திப்பு ஒரு தினசரி கண்ணுருவியாகிவிட்டது. அதை யாருமே லக்ஷியம் செய்வதாக இல்லை.

ஜெர்மனி மீது நேசதேசக் குண்டுவீச்சு பலத்து வருகிறது. 'என்னய்யா, இந்த குண்டுவீச்சு சப்தம் என்னைப் பித்துப் பிடிக்கச் செய்துவிடும் போலிருக்கிறதே!' என்று ஒரு பெர்லின் நகரவாசி அழுதானாம்.

'நாளாவட்டத்தில், குண்டு விழுந்து வெடிக்கும் சப்தம் காதுக்குப் பழக்கமாகிவிடும் அப்பா! அதுவரை கவலைப்படாதே! என்றானாம் அவனது நண்பன்.

ஜெர்மனியிலே உள்ள ஆசாமிகள் இயற்கைக்கு விரோதமாக, சுய தேவைகளைப் பூர்த்தி செய்யத் திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்களாம். அவர்களுக்குக் கப்பல்களும், ரயில் போக்குவரத்தும், தொழிலாளர்களும் தாராளமாக இருந்த காலமெல்லாம் போனதே, இதற்குக் காரணம்.

மீசை கூட முளைக்காத, பதினாறு வயசுப் பையன்கள் பலர் இப்பொழுது ருஷ்யர்களிடம் கைதிகளாகச் சிக்கி யிருக்கிறார்களாம். இதிலிருந்து, ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கும் ஆள் பஞ்சம் நன்றாகத் தெரியவில்லையா?

ஹிட்லருக்குப் பலவகைப் பஞ்சங்கள்.

ஆள் பஞ்சம், வெற்றிக்குப் பஞ்சம், மானத்திற்குப் பஞ்சம் என்று பல பஞ்சங்கள் ஹிட்லரை வாட்டி வருத்துகின்றன. அவரிடம் இனி யாரும் இரக்கம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கவே வேண்டாம்.

நேசதேசத்தார்கள் நீண்ட நாட்களுக்கு திட்டங்கள் போட்டுக்கொண்டு விட்டார்கள். வெற்றி வழியில் பிரவேசித்து, வெகு ஜோராக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு ஆட்களைத் தியாகம் செய்து, எப்பொழுது இறுதி வெற்றியை அடைவது என்பது தான் தீர்மானமாகத் தெரியாது. ஹிட்லர் பூண்டையே வேரோடு கெல்லி எறிந்து எதிர் காலத்திலே ஐரோப்பாவிலே சண்டையை ஆரம்பிக்கும் சக்தி ஜெர்மனிக்கு ஒரு சிறிதும் இல்லாதபடி செய்து தீர்த்து நேசதேசத்தாரின் பாதுகாப்பு சக்தி நிரந்தரமாக இருக்கும்படி செய்து முடிக்கும் வரை, யுத்தம் நடக்கும். ஆனால், வீணாகக் காலத்தைக் கடத்தும் யோசனை யாருக்கும் இல்லை. ஹிட்லர் கோஷ்டியாருக்கும், அவர்களில் முக்கியமாக டோஜோ சம்பந்தப்பட்டவர்களுக்கும் அந்த யோசனை இருக்கலாம். ஆனால் அந்த யோசனையால் அவர்கள் பலனடையவே போவதில்லை. அதுமட்டும் நிச்சயம். அவர்கள் ஒரு பக்கமும், தர்ம நியாயத்திற்காக உலகில் அவர்கள் போக பாக்கி உள்ள அனைவரும் ஒரு பக்கமும் நின்று போராடும்பொழுது, தர்ம நியாயக்கட்சி ஜயிக்காமலா போகும்? இதில் சந்தேகங்கொள்ள இடமெங்கே ஐயா இருக்கிறது? ஜெர்மனி மதயானையாக இருந்தது போய், இப்பொழுது அது வெறும் வலுவிழந்த யானையாக இருக்கிறது, சாதாரணமாக இருந்த பிரிட்டிஷ் சிங்கம், காயகல்பம் உட்கொண்டவர்களைப்போல் இளமையும் வலுவும் கொண்டு, சரியான சகாக்களோடு கர்ஜித்துக் கொண்டிருக்கிறது. இன்னுமா ஜெர்மன் யானை சமாளித்து நிற்குமென்று நினைக்கிறீர்கள்.

அங்கும் இங்கும்

இத்தாலி எந்த நிமிஷத்திலும் போரிலிருந்து விலகிவிடும் என்பதை முன் கூட்டியே உணர்ந்திருக்கிறார் ஹிட்லர். அதனால் தான் அதற்கேற்ற ஏற்பாடுகளை யெல்லாம் செய்து கொண்டு, சட்டென இத்தாலியில் பெரும் பகுதியை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார். ரோமாபுரியிலே நாஸிகள் கூடிக் கிடக்கிறார்கள். போப் பாண்டவரின் வாடிகன் நகரை அவர்கள் முற்றுகை போட்டிருக்கிறார்கள். பல மத குருக்களை அவரவர்களது மனைகளிலேயே அடைத்து வைத்திருக்கிறார்களாம். வெளி உலகிற்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லாது செய்து விட்டார்கள். முன்பு வெற்றித் திமிரால் கோவில்களையும், பள்ளிகளையும் பாழாக்கிக் கொண்டிருந்தார்கள் நாஸிகள். இப்பொழுது, எங்கும் இடிபடுகிறோமே; நம் கைகளை விட்டுப் போகும் ஊர்களும், பொருள்களும் இருந்தென்ன, போயென்ன என்று எல்லாவற்றையும் கொளுத்தித் தள்ளுகிறார்களாம். இப்பொழுது அவர்களைத் தடுப்பவர் யாருமில்லை. ஆனால், என்றாவது ஒரு நாள் யுத்தம் முடியத் தான் போகிறது. அன்று கணக்குத் தீர்க்கத்தான் போகிறார்கள் நம்மவர்கள். ஏனென்றால், வெற்றியடையப் போகிறவர்கள் நம்மவர்கள் தானே! இவர்கள் தானே, விட்டுக் கொடுப்பதானாலும், வைத்து வாங்குவதானாலும் செய்ய வேண்டியவர்கள். ஆகவே இவர்களிடம், இப்பொழுது அக்ரமம் செய்வோர் எல்லாம் வந்து நின்று, தாங்கள் செய்த செய்கைகளுக்கு தக்க பதில் சொல்லியே தீர வேண்டும். என்ன பதில் சொல்லப் போகிறார்கள் திரும்பத் திரும்ப. 'ஹிட்லர் சொன்னார்; செய்தேன்! என்று தான் அழப் போகிறார்கள். அதற்கேற்ற தண்டனையையும் அனுபவிப்பார்கள் அவர்கள்.

இத்தாலியில் மகா கடும் போர்.

இத்தாலியிலே, பாலைவனப் போரிலும் கடுமையான போர் நடப்பதாகத் தெரிகிறது. மளமளவென முன்னேறும் பாக்கியம் எட்டாவது சேனைக்குக் கிடைத்திருக்கிறது. அதனிடம் உதை வாங்கி அனுபவப்பட்டிருக்கிறார்களல்லவா அச்சு நாட்டார்? அதனால் கூடியவரை அதோடு போராடாது, தட்டிக் கழிக்க முயலுகிறார்கள் போலிருக்கிறது ஜெர்மானியர். ஆனால், ஐந்தாவது படை முன்னேறுகிறதே ஒழிய, நின்ற இடத்தில் நின்று விடவில்லை.

விசூவியஸ் புகையைவிட நேபில்ஸில் அதிகப் புகை.

கெஸல்ரிங் என்பவர் தான் இத்தாலியில் உள்ள ஜெர்மன் படைகளுக்குத் தலைவர். அவர் வெகு ஜாக்கிரதையாகவே யுத்தத்தை நடத்துகிறார். நேச தேசத்தார் அடிமேலடி வைத்து, மலைகளில் ஏற்படும் கடுமையான ஜெர்மானிய எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டு, நேபிள்ஸ் நகர்ப் புறமுள்ள சம வெளியை அடையப் பார்க்கிறார்கள். ஜெர்மன் படைகள் பல இடங்களில் பதுங்கிக் கிடந்து, வெகுவாக சிரமப் படுத்துகிறார்களாம். சரித்திரப் பிரசித்தி பெற்ற நேபிள்ஸ் நகரம் புகைந்து கொண்டு கிடக்கிறதாம். அதனருகே உள்ள வெசூவியஸ் என்ற எரிமலையில் ஏற்பட்ட புகையைவிட நேபிள்ஸில் ஏற்பட்ட புகை, அதிக உயரம் கிளம்பி யிருக்கிறதாம். வெசுவியஸ் எரிமலை, எரியும். கல், மண் எல்லாவற்றையும் குழம்பு ரூபத்தில் வெளியே கக்கியபோது ஏற்பட்ட சேதத்தைவிட, அதிகமான சேதம் இப்பொழுது ஏற்படும் போலிருக்கிறதாம். நேச தேசக் கப்பல்கள் தைரியமாக சலாரினோ துறைமுகத்தருகே பல கப்பல்களைக் கொணர்ந்து நிறுத்தி, ஆட்களையும், ஆயுதங்களையும் உணவுப் பொருள்களையும் இறக்குகிறார்களாம். கடலோரத்தில் நின்றுள்ள கப்பல்கள் தங்கள் பீரங்கிகளுக்கு ஓய்வே கொடுப்பதாக இல்லையாம். விமானங்களோ வெளுத்து வாங்குகின்றனவாம். நேச தேசப் படைகளுக்கு முன்னால், ஜெர்மன் படைகள் ஓட்டம் பிடித்த வண்ணமாகவே இருக்கிறாப் போலிருக்கிறது.

இம்மாதிரியே ஓடிக் கொண்டிருந்தால், சண்டை போய் போடுகிறவர்களுக்குக் கூட ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிடக் கூடும். போர்க்களத்துக்குப் போனோம்; சரியான எதிரியோடு சரிக்குச் சரியாக நின்று போராடினோம்; ஜெயித்தோம்; அல்லது அவனது வீர தீரத்தைக் கண்டு மெச்சி, சந்தர்ப்பத்திற்கேற்ப பின்னாலே இடம் மாறினோம் என்றிருந்தால் தானே, போராடுபவனுக்கு ஒரு உத்சாகம் இருக்கும்? அந்த உத்சாகத்தை நம் எதிரிகளுக்கு நாம் ஏன் கொடுக்க வேண்டுமென ஜெர்மன் படைகள் நினைக்கிறாப் போலிருக்கிறது. அது சரி ஐயா! ஜெர்மானியர் இத்தாலியைக் கைப்பற்றிய பின், நிறைய விமானங்களை அங்கு கொண்டு வந்து குவித்ததாகச் சொன்னார்களே, அந்த விமானங்களில் எதுவும் வெளியே காணோமே! எங்கோ பதுங்கிக் கொண்டிருக்கின்றனவே!' என்று தான் ஒவ்வொரு நேச தேச விமானியும், தனது மேலதிகாரியைக் கேட்டுக் கொண்டிருப்பார்.

வாஸ்தவம்! நேச தேச விமானங்களுக்கு, இத்தாலி மீது எதிர்பார்த்த எதிர்ப்பைக் காணோம். ஏதோ ஒரு காரணார்த்தமாகத்தான் அவை பதுங்கிக் கிடக்கின்றனவோ, என்னமோ? நேசதேச வேட்டை விமானங்களில் ஏதாவதொன்றைக் கண்டதும், ஜெர்மன் விமானங்கள் அதி வேகமாக ஓடி விடுகின்றனவாம்.

இங்கிலிஷ் கால்வாயில் ஒத்திகை.

சமீப காலத்திலே, இங்கிலீஷ் கால்வாயிலே கப்பற் படை வெகு தைரியமாக ஒத்திகை ஒன்றை நடத்தியது. அன்று ஜெர்மானிய விமானங்கள் ஒன்றாவது தலைகாட்ட வேண்டுமே! பேசப் படாது. இவ்வாறு ஒரு ஒத்திகை நடக்கிறது என்று தெரிந்திருந்தால் கூட, ஜெர்மானியர், தைரியமாக முன் போல் விமானங்களை அனுப்ப முடியாது. பிய்த்துத் தள்ளிவிட மாட்டார்களா நமது வீரர்கள்?

பிரிட்டிஷ் கால்வாயிலே கடற்படை ஒத்திகை, மாஸ்கோவிலே பெரிய நாடகக் கொட்டையின் திறப்புவிழா என்ற செய்திகளைக் கேட்கும் பொழுதெல்லாம், ஜெர்மானியரது தாக்கும் சக்தி எவ்வளவு குன்றிப் போயிருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது.

இத்தாலி சரணாகதி யடைந்ததால், இத்தாலியக் கப்பற் படை தானாகவே புறப்பட்டு நேச தேசத்தாரிடம் வந்து சேர்ந்திருக்கின்றன. அம்மாதிரியே விமானப் படையும் சேரவில்லையா? என்று கேட்கலாம்.

இல்லை என்பதே இதற்கான பதில். இத்தாலி சரணாகதி அடைந்த உடனேயே ஜெர்மானியர் ஆங்காங்கே உள்ள இத்தாலிய விமான கூடங்களைக் கைப்பற்றிவிட்டார்கள். அப்பொழுது தப்பி வந்த இத்தாலிய விமானங்களும், விமானிகளும் ரொம்பக் கொஞ்சம்தான். அவ்வாறு வந்த விமானங்கள் நேச தேசத்தவர்களுக்கு அதிகப் பயன் படும் என்று தோன்றவில்லை. காரணம், மாற்று பாகங்கள் இல்லாத மோட்டார்களோ, ரயில்களோ, விமானங்களோ, இருந்து மொன்றுதான்; போயு மொன்றுதான். வரும்பொழுதே எல்லா மாற்று பாகங்களையும் வாரிக் கட்டிக் கொண்டு வரமுடியுமா என்ன?

இத்தாலி சரணாகதியடைந்தது என்றதும், நார்வே யருகே இருந்த பெரிய ஜெர்மன் கப்பல்கள் மூன்றை அந்தந்தக் கப்பல்களில் வேலை பார்ப்போரே சதி செய்து, வெடி வைத்து, கப்பலை உடைத்து மூழ்கடித்து விட்டார்களாம்.

நார்வேயில் கொந்தளிப்பு.

நார்வேயிலே உள்ளூரக் கொந்தளிப்பு இருந்து கொண்டிருக்கிறதாம். 'சண்டை முடியட்டும். அதுவரை எங்களுக்கு ஆதரவளித்து வாருங்கள். சண்டை முடிந்ததும், உங்களுக்குச் சுதந்திரம் கொடுத்துவிடுகிறோம் என்கிறாராம் ஹிட்லர். எத்தகைய பசப்பு வார்த்தைகளய்யா! ஹிட்லர் ஜெயித்தல்லவா, நார்வேக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும்? "அத்தைக்கு மீசை முளைத்து, சித்தப்பா" ஆகிற கதைக்கும் இதற்கும் அதிக வித்தியாசமே இல்லை.

* * * *

சென்ற இரண்டு வருஷங்களில் அமெரிக்காவில் இரண்டாயிரத்து நூறு கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இதே காலத்தில், ஆயிரக் கணக்கில் ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. கப்பல் பஞ்சத்தால் கண் பிதுங்க நிற்கிறார்கள் ஜப்பானியர். அகலக்கால் வைத்துவிட்டு, ஆந்தை போல் முழிக்கிறார்கள். பர்மாவிலும் அடி, நியூகினி, ஸாலமன்ஸ் தீவுகளிலும் உதை. அடுத்தாப் போல பர்மா படையெடுப்பு ஆரம்பமாகப் போகிறது. அப்பொழுதிருக்கிறது ஜப்பானியருக்கு சரியான பூசை!

(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

உத்தியோகஸ்தர்கள் பூர்வாங்க பயிற்சி சாலை.

ஒரு அபேட்சகர் மாகாண 'செலெக்ஷன் போர்டா'ரால் அங்கீகரிக்கப்பட்டு, பொது அறிவும் உடற்கட்டும் குறைவா யிருந்தால், அப்படிப் பட்டவர்கள் அடையாற்றிலுள்ள உத்தியோகஸ்தர்கள் பூர்வாங்க பயிற்சி சாலைக்கு அனுப்பப் படுகிறார்கள். அங்கே இலவசமாக 3 மாதங்கள் பயிற்சி யளிக்கப்படுகிறது. சென்னை ரிக்ரூட்டிங் சப் கமிட்டியாரின் விருப்பப்படி தான் இப் பயிற்சிசாலை ஆரம்பிக்கப்பட்டது. இது அடையாற்றிலுள்ள ஒரு அழகிய பங்களாவில் நடைபெறுகிறது.

அந்தப் பயிற்சிசாலைத் தலைவர் மிகவும் திறமை வாய்ந்தவர். மாணாக்கர்களிடையே இவருக்கு மிகவும் செல்வாக்குண்டு. இவருக்கு உதவியாக உள்ள ஆசிரியர்களும் அவரைப் போலவே செல்வாக்கும் திறமையும் மிகுதியும் உடையவர்கள். அங்குள்ள மாணாக்கர்கள், தம் வாழ்க்கையை முறைப்படுத்திக் கொண்டு, நல்ல பயிற்சிகள் செய்வதனால், அவர்களுடைய பொது அறிவும் உடற்கட்டும் வெகுவாக அதிகப்படு கின்றன. நேர்முகமாக இப் பதவிக்கு நியமிக் கப்படுகிறவர்களை விட, இந்தப் பயிற்சி சாலையில் தேறி 5-வது செலெக்ஷன் போர்டு மூலமாகப் போகிறவர்களின் எண்ணிக்கை தான் அதிகம். இப் பயிற்சிசாலையில் 50 பேர்களுக்குத்தான் இடம் இருந்தது. இப்போது 70 பேர்களுக் கிருக்கிறது. அடுத்த ஜனவரி மாதத்தில் 120 பேர்களை இங்கே சேர்த்துக் கொள்ளலாம்.

மாணவ உத்தியோகஸ்தர்கள் உடற் பயிற்சி செய்யும் காட்சி.

புத்திசாலித்தனமாக பரீட்சித்து அபேட்சகர்களை மனோதத்துவ சாஸ்திரிகள் பொறுக்கி எடுக்கிறபடியால், தேறுகிறவர்கள் உண்மையிலேயே கெட்டிக்காரர்களாகத் தானிருக்கிறார்கள். முன்பு மனுச் செய்து கொண்டவர்களில் 100-க்கு 70 பேர்களை எடுத்தோம். இப்போது 100-க்கு 50 பேர்களை மட்டுந் தான் எடுக்கிறோம். இனி வரக்கூடிய அபேட்சகர்கள் மேலான தகுதிகள் உடையவரா யிருப்பார்க ளென்றும், இவர்களில் தேறுகிறவர்களின் சத விகிதம் அதிகப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

மாணவ உத்தியோகஸ்தர்கள் கூடார வாசம்.

விமானப் படை பற்றிய குறிப்புகள்

குறிப்பாக விமானப் படையைப் பற்றி ஒரு வார்த்தை. இந்த யுத்தத்தில் வெற்றி பெறவும், அதற்குப் பிறகு இந்த வெற்றியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியும் அதிகமான விமானங்களும் விமானிகளும் வேண்டும். அநேக விமான மோட்டிகள் இந் நாட்டிற் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். உங்களில் தகுந்த தகுதியுள்ளவர்க ளிருந்தால், நீங்களும் அந்தப் பயிற்சி பெறலாம். விமானப் படையில் விமான மோட்டியாக இருப்பது, சிலர் நினைப்பது போல அவ்வளவு சுலபமானதல்ல. ஏறக்குறைய ஒரு வருஷம் மிகக் கடுமையாக உழைத்தால் தான், இந்தப் பயிற்சி பெறக் கூடும். இரவும் பகலும் பறக்க வேண்டும். விமான நிர்மாணத்தைக் குறித்தும், சத்த மூலமாகவும், உப கருவிகளைக் கொண்டும் சமிக்ஞை செய்யவும் கற்றுக் கொள்ள வேண்டும். தந்தி யில்லாக் கம்பி இயந்திரத்தைக் கையாளவும் கற்றுக்கொள்ள வேண்டும். தளவாடங்களைப் பற்றிய விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். மிஷின் பீரங்கிகளும் வெடி குண்டுகளும் தான் விமானியின் முக்கியமான ஆயுதங்கள். நம் இளைஞர்கள் இந்தத் துறையிலும் முனைந்து கெட்டிக்காரர்களாவார்கள் என்பது பற்றி எனக்குச் சந்தேகமே கிடையாது. யுத்தகாலம் வரைக்கும் கமிஷன் பதவிகள் வழங்கப் பட்டிருக்கும் நம் இளைஞர்களின் நிலைமை, பிற்காலத்தில் எப்படி யிருக்கு மென்று நீங்கள் கேட்கலாம். எதிர் காலத்தில், இந்திய விமானப் படை மிகவும் பலமுள்ளதாக இருக்க வேண்டும். இந்திய விமானப் படையில் பதவிகள் அவர்களுக்காக காலியா யிருக்கும். சிவில் விமான வேலைகளிலும் அநேகம் பதவிகள் காலியாகும். இந்தப் பயிற்சி பெறுதவர்களைக் காட்டிலும், இப்பயிற்சி பெற்றவர்கள் இதையே தம் தொழிலாகக் கொள்ள விரும்புவார்களானால், பயிற்சி பெறுத மற்றவர்களைக் காட்டிலும் முன்னதாகவே வேலைகளில் அமர்ந்து கொள்ளலாம். ஆகவே, நீங்களும் விமானப் பயிற்சி பெற்று, இந்த யுத்தத்தில் உங்களால் இயன்ற அளவு உதவ வேண்டு மென்று வேண்டுகிறேன்.

மன்னர்பிரான் கமிஷனுக்கு முதலில் ஆள்சேர்க்க ஆரம்பித்த போது, 3 அங்கத்தினர்களைக் கொண்ட ரிக்ரூட்மெண்ட் கமிட்டி யிருந்தது. அப்போது ஒரு மாதத்தில் 10 முதல் 15 அபேட்சகர்கள் தான் ஆஜரானார்கள். சில மாதங்களில் இதற்கும் குறைவாயிருந்தது அவர்கள் எண்ணிக்கை. 1941-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் 4 அங்கத்தினர்களையும் ஒரு தலைவரையுங் கொண்ட ஒரு 'செலெக்ஷன் போர்டு' அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் அதிகாரத்தோடு ஏற்பட்டது. இதற்கிடையில், மன்னர்பிரான் கமிஷனுக்கு ஆட்களைப் பொறுக்கி எடுப்பது பற்றி, ஜனங்களுக்கு அதிகமாய்த் தெரிய ஆரம்பித்தது. அதன் பயனாக திருப்திகரமான அளவிற்கு அபேட்சகர்கள் ஆஜரானார்கள். இப்போது மாத மொன்றுக்கு 100 முதல் 120 அபேட்சகர்கள் மனுப் போடுகிறார்கள். சாதாரணமாக இந்த 'செலெக்ஷன் போர்டு' மாதம் இரண்டு முறை கூடுகிறது. அபேட்சகர்களின் எண்ணிக்கை அதிகமா யிருந்தால், சில சமயங்களில் 3 அல்லது 4 முறையும் கூடுவதுண்டு.

தமிழ்ப் பெருமக்களே !

"விடுதலை"

உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றால், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.
ராய்ட்டர், அசோசியேடட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப் பத்திரிகை அப்படியே தருகிறது.
குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அலை இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.
இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய் கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.
நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.
இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக் கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

செப்டெம்பர் 23.—ஹானேவரையும் வடமேற்கு ஜெர்மனியிலுள்ள பல இடங்களையும் பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

காமன்ஸ் சபையில் தொழிலாளர் கட்சியினர் கூறிய குறை பாட்டிற்குப் பதிலளித்த மிஸ்டர் ஆன்டனி ஈடன், பரிபூரண வெற்றி கிடைக்கிற வரை தேசிய அரசாங்கந் தான் இருக்க வேண்டு மென்று வற்புறுத்திக் கூறினார்.

இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியிலும் வட கிழக்குப் பகுதியிலுமுள்ள கரை யோர ஜில்லாக்களில், எதிரிகள் சற்று தலை காட்டிப் பார்த்தார்கள்.

செப்டெம்பர் 24.—வெறெந்த நாட்டிலும் இல்லாதபடி அவ்வளவு அதிகமாக படைகளுக்கு ஆட்கள் இங்கிலாந்தில் திரட்டப்பட்டிருக்கின்றனரென்று, தொழில் மந்திரி மிஸ்டர் பிவின் காமன்ஸ் சபையில் குறிப்பிட்டார்.

சர் இங்ஸ்லி உட் மரண மடைந்ததை முன்னிட்டு மந்திராலோசனை சபையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. சர் ஜான் ஆன்டர்ஸன் நிதி மந்திரியானார். லார்ட் பீவர்ப்ருக்கும் ஒரு மந்திரியானார்.

செப்டெம்பர் 25.—ஒரு விசேஷ வேலையை முன்னிட்டு பல மாதங்கள் வரை இங்கிலாந்திலேயே இருக்கும் பொருட்டு மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் அங்கு வந்து சேர்ந்தார்.

சுமார் 15 நிமிஷ நேரம் ஜெர்மனியருக்கும் பிரிட்டிஷாருக்கும் இங்கிலிஷ் கால்வாயின் இரு கரைகளிலிருந்தும் பெரிய போராட்டம் பெரிய பீரங்கிகளைக் கொண்டு நடந்தது.

பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் ஜிப்ரால்டரில் பிரமாதமாகப் போய் வந்து கொண்டிருந்தன.

செப்டெம்பர் 26.—ஜெர்மன் விமானப் படைகள் இங்கிலாந்தில் தோல்வி யடைந்த மூன்ருவது ஆண்டு விழாவைக் கொண்டாட வேண்டி, இங்கிலாந்து முழுதிலும் படைகள் அணி வகுத்துச் சென்றன.

நியூகாஸில் என்னுமிடத்தில் செய்ததோர் பிரசங்கத்தில் அதிகமாக விமான உற்பத்தி செய்ய வேண்டுமென்று, விமான உற்பத்தி மந்திரி சர் ஸ்டர்போர்ட் க்ரிப்ஸ் கூறினார்.

அர்ஜென்டினாவிலிருந்து எற்றுமதி செய்யப்படக் கூடிய எல்லா உணவுப் பொருள்களையும் பிரிட்டன் வாங்கிக் கொள்ளுவது என்பது பற்றி, பிரிட்டனுக்கும் அர்ஜென்டினாவிற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது.

செப்டெம்பர் 27.—ஜெர்மானியர்களின் கப்பல் தளமும் நீர் மூழ்கித் தளமுமான 'எம்டன்' மீது வெடி குண்டுகள் வீசப்பட்டன. எதிர்த்த 9 ஜெர்மன் போர் விமானங்கள் நாசமாயின.

இங்கிலாந்துக் கரைக் கப்பால் அநேக ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தடுத்துக் காயப்படுத்தப்பட்டன. அவற்றுள் ஒன்று மூழ்கியது.

ஹிட்லரிடமிருந்து நார்வேகாரர்களுக்கு வந்த தோர் செய்தியை ரெய்ச் கம்மிசார் டெர்போவின், 'ப்யூரர்' படைகளுக்கு முன் வாசித்தார்.

குடியேற்ற நாடுகள், சுயராஜ்யம் அடையத் தக்க வழியில் கொண்டு செலுத்தப்படும் என்று குடியேற்ற நாட்டு மந்திரி மிஸ்டர் ஸ்டான்லி, லாகாஸ் என்னுமிடத்தில் பேசும் போது மீண்டும் குறிப்பிட்டார்.

செப்டெம்பர் 28.—6,000 பெண்கள் கூடிய ஒரு லண்டன் மகா நாட்டில் மிஸ்டர் சர்ச்சில் பேசினார்.

இங்கிலீஷ் கால்வாயில் நடைபெற்றதோர் கப்பற் போரில், பலமான ஆயுதங்கள் அமைந்திருந்த 3 எதிரி கப்பல்களை, நேச நாட்டுக் கப்பல்கள் டார்பிடோக்களைக் கொண்டும் பீரங்கிகளாலும் தாக்கி இரண்டை மூழ்கடித்தன; ஒன்று காயப்பட்டது.

ஹானேவர், பர்ன்ஸ்விக், எம்டன் ஆகிய இடங்கள் வெடிகுண்டுகளால் கடுமையாகத் தாக்கப்பட்டன.

நாஜி உத்தியோகஸ்தரான டாக்டர் ரிட்டர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ரஷ்யாவும் பின்லாந்தும்.

செப்டெம்பர் 23.—ஸ்மாலென்ஸ்க்குக்கு 10 மைல் தூரத்தில் சோவியத் படைகள் இருக்கின்றன.

ரஷ்யப் படைகள் பொல்டேவா, உனிச்சா என்னுமிடங்களைக் கைப்பற்றின.

செப்டெம்பர் 24.—க்யூபாவிலுள்ள முக்கியமான கேந்திர ஸ்தானத்தை ஜெர்மானியர்கள் காலி செய்து விட்டனர். ரஷ்யப் படைகள் வலிஸ்போல், செமெனேப்கா, கொகுலேப், ஒசெனேபோ ஆகிய இடங்களைக் கைப்பற்றின. ஸ்மாலென்ஸ்க்குக்குக் கிழக்கே நீப்பர் ஆற்றை ரஷ்யப் படைகள் கடந்து விட்டன.

செப்டெம்பர் 25.—ஜெர்மனியின் மாபெரும் அரணான ஸ்மாலென்ஸ்க் பிடிபட்டது. ரோஸ்லால், பெட்ரிக்கோப்கா, கோபலிஸ்கி, ப்ரோவோரி, க்லின்ட்சி, டுப்ரோப்கா ஆகிய பட்டணங்களையும், மற்றும் 550 சிற்றூர்களையும் ரஷ்யர்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். கியேவுக்கு வடக்கிலும் தென் கிழக்கிலும் நீப்பர் ஆற்றங்கரையில் ரஷ்யர்கள் போராடினார்கள். வெள்ளை ரஷ்யா பக்கமாக ரஷ்யப் படைகள் நுழைந்து வருகின்றன. கியேவ் பகுதியிலிருந்து ஹங்கேரியர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

மத சம்பந்தமான பரிபூரண சுதந்தரம் ரஷ்யாவில் இப்போது இருப்பதாக, யார்க் ஆர்ச் பிஷப் குறிப்பிடுகிறார்.

அமெரிக்கத் தூதராக ரஷ்யாவிற்குப் போயிருக்கும் கார்டல் ஹல், அட்மிரல் ஸ்டான்ட்லி, அவெரில் ஹாரிமன் ஆகிய மூவரும் கூடி, இனி நடைபெறப் போகிற மூவரசு மகா நாட்டைக் குறித்து பேசினார்கள். அமெரிக்காவிலிருந்து ரஷ்யாவிற்குச் செல்லும் தூதுக் கோஷ்டிக்கு மிஸ்டர் கார்டல் ஹல் தலைமை வகித்து, மாஸ்கோவில் நடைபெறப் போகும் மூவரசு மகா நாட்டிற்குப் போவாரென்றும், அவர் தன்னுடன், ரஷ்யாவில் அமெரிக்கத் தூதராகப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஹாரிமானையும் அழைத்துக் கொண்டு போவாரென்றும் தெரிகிறது.

செப்டெம்பர் 26.—நீப்பர் ஆற்றின் மேற்குக் கரையில் சோவியத் படைகள் சில சிறிய அரண்களை அமைத்துக் கொண்டன. பல போர் முனைகளிலும் பலமான போராட்டங்கள் நடைபெற்றன. நூற்றுக் கணக்கான இடங்கள் ரஷ்யர்கள் வசமாயின.

பின்லாந்திற்கு அமைதியைத் தேடித் தர வேண்டிய கடமை ரஷ்யர்களைச் சார்ந்தது என்று பின்னிஷ் நிதி மந்திரி மிஸ்டர் வியானேடாணர் கூறினார்.

செப்டெம்பர் 27.—டெம்ரியுக், நிழ்மி, நிப்ரோபெட்ரோப்ஸ்க், கோடுர்ஸ்க், சுராதத் ஆகிய இடங்கள் கைப்பற்றப் பட்டன. நீப்பர் போர் முனையில் பிளவு கண்டுவிட்டது. அங்கே எந்த நிமிஷம் வேண்டுமானாலும் ஜெர்மானியர்களுக்குப் படுதோல்வி ஏற்படலாம்.

பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூடப்போகிற மகாநாடு, மாஸ்கோவில் நடைபெறும்.

செப்டெம்பர் 28.—க்ரெமென்ஸ்க்குக்குப் போகும் திசையில், சோவியத் படைகள் 14 மைல்கள் தூரம் முன்னேறி 120 இடங்களைக் கைப்பற்றின. கியேவுக்குப் போகும் திசையில் பலவிடங்கள் ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்கிக் கொண்டு போய் நீப்பர் ஆற்றின் வடகரையிலுள்ள அநேக இடங்களை வசப்படுத்திக் கொண்டார்கள். கியேவுக்கும் சொர்க்காசிக்கும் இடையே அநேக அரண்களை ரஷ்யர்கள் அமைத்துக் கொண்டனர்.

அமெரிக்காவும் அத்லாண்டிக்கும்.

செப்டெம்பர் 23.—அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்சன் "சென்ற வாரத்தில், உலகிலுள்ள எல்லாப் போர் முனைகளிலும் நம் படைகள் வெற்றி பெற்றன" என்று கூறினார்.

செப்டெம்பர் 24.—பசிபிக் எலெக்ட்ரிக் ரயில்வே கம்பெனி வேலைக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

1934-ம் வருஷம் நிறைவேற்றப் பட்டதோர் சட்டப்படி 1946-ம் வருஷம் ஜூலை மாதம் 4-ம் தேதி பிலிப்பைன் தீவுகளுக்குச் சுதந்தரம் வழங்கப்பட வேண்டும். அதை, உடனடியாக வழங்கி விட வேண்டுமென்று அமெரிக்க செனெட் தீவக விஷயக் கமிட்டித் தலைவரான செனடர் டைடிங்ஸ் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்.

செப்டெம்பர் 25.—'கப்பற் படை வெற்றி விழா' பற்றி அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் விடுத்த தோர் அறிக்கையில், "கப்பற் கட்டுவதில் முதல் ஸ்தானத்தை அமெரிக்கா வகிக்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

செப்டெம்பர் 26.—அமெரிக்க அண்டர் செக்ரடரி ஆப் ஸ்டேட்ஸ் மிஸ்டர் சம்னர் வெல்ஸ் தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டதாகவும், அவருக்குப் பதிலாக மிஸ்டர் எட்வர்ட் ஆர். ஸ்டெட்டினியஸ் (இளையவர்) என்பவரை நியமித்திருப்பதாகவும், மிஸ்டர் ரூஸ்வெல்ட் அறிவித்தார்.

செப்டெம்பர் 27.—சர்வ தேச சங்கத்தின் (ஆக்டிங்) செக்ரிடெரி-ஜெனரலான மிஸ்டர் சீன் லெஸ்டர், புல்ப்ரைட் தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது பற்றிப் பேசும் போது, சமாதானத்தை நிலை நாட்டவும், முன்னேற்றத்திற்கான வழிகளை அமைக்கவும் இது மிகச் சிறந்த வழி என்று கூறுகிறார்.

செப்டெம்பர் 28.—ஆங்கிலோ-அமெரிக்க இராணுவத் தலைவராக ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல் நியமிக்கப்படப் போகிறார் என்கிற செய்தியை மிஸ்டர் ரூஸ்வெல்ட் உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ முடியாதென்கிறார். ஆனால், அப்படிப்பட்ட தோர் ஆலோசனை இருந்து வருவதாக அவருடைய போக்கி லிருந்து தெரிகிறது.

ப்யூரிடாரிகோவுக்கு சுயாட்சி வழங்குவது பற்றிய மசோதா ஒன்றை மிஸ்டர் ரூஸ்வெல்ட் அமெரிக்க அரசாங்க சபைக்கு சமர்ப்பித்திருக்கிறார்.

அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் 3 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் நாசமாயின.

1917-ம் வருஷக் கடைசியில் ஜெர்மன் கப்பற் படைக்கு என்ன நிலைமை ஏற்பட்டதோ, அதே நிலைமையில் தான் இப்போதும் அது இருக்கிறதென்று ரியர் அட்மிரல் பிரான்சிஸ் லோ ஒப்பிட்டுக் கூறினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

செப்டெம்பர் 23.—வங்காளத்தில் உணவுப் பொருள் நெருக்கடியைக் குறித்து காமன்ஸ் சபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இந்திய மந்திரி மிஸ்டர் அமெரி பதிலளித்தார்.

இந்தியா சம்பந்தமாகக் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது, 'புதிய சம்பவங்கள் எதுவும் நேரவில்லை' என்று கூறினார்.

விஞ்செஸ்டர் நகரத்தார் தனக்களித்த வரவேற்பிற்கும், ராயல் எம்பையர் சங்கத்தார் தனக்களித்த வரவேற்பிற்கும் பதிலளிக்கும் போது, இந்தியாவில் தான் செய்யப் போவ தென்ன வென்பது பற்றி வேவல் பிரபு கூறினார்.

செப்டெம்பர் 24.—மன்னர்பிரான் பீல்ட் மார்ஷல் லார்ட் வேவலுக்கு பேட்டி யளித்தார். அவருக்கு ப்ரிவி கௌன்ஸிலர் பதவியையும் ஜி.சி.எஸ்.ஐ., ஜி.சி.எஸ்.இ. ஆகிய பட்டங்களையும் வழங்கினார்.

ஐராவதி ஆற்றிலுள்ள கப்பல்களையும் படகுகளையும், மின்புவுக்கு அருகிலுள்ள எண்ணெய்க் கிணறுகளையும், ஷவெபோவிலும் மாண்டலேயிலும் உள்ள போக்கு வரவு வசதிகளையும் வண்டிகளையும் பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கின.

நன்கு பயிற்சி செய்யப்பட்ட பூரண ஆயுத பாணிகளைக் கொண்ட தென்னாப்பிரிக்கப் படையொன்று இலங்கைக்கு வந்து சேர்ந்தது.

செப்டெம்பர் 25.—இந்தியாவின் யுத்த முயற்சிகளைக் குறித்து அமெரிக்காவிலும் பிரிட்டனிலு முள்ள பொது மக்களுக்கு எடுத்து விளக்கும் பொருட்டு இந்தியாவி லிருந்து 4 பேர்கள் விரைவில் புறப்படப் போகிறார்கள்.

செப்டெம்பர் 26.—மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் 4-வது இந்திய டிவிஷன் படையைச் சேர்ந்த சுபேதார் லால் பகதூர் தபாவுக்கு 'விக்டோரியா க்ராஸ்' பதக்கத்தை யணிவித்தார்.

இங்கிலாந்தில் அநேக பட்டணங்களில் 'பிரிட்டானியப் போர் வெற்றி' விழாவைக் கொண்டாடினார்கள்.

மேமியோவிலுள்ள படை வீடுகளையும் ரயில்வே கேந்திர ஸ்தானங்களையும் பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கின.

செப்டெம்பர் 28.—வைகௌண்ட் வேவலுக்கும் அவருடைய மனைவியாருக்கும் இந்தியா ஹைகமிஷனர் ஒரு விருந்தளித்தார்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

செப்டெம்பர் 23.—ஐந்தாம் படையும் எட்டாம் படையும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஜெனேசா, அவிக்லியானோ, ஆட்ரியானோ, அஸெர்னோ ஆகிய பட்டணங்கள் கைப்பற்றப் பட்டன. நேப்பில்ஸ் நகரம் நெருப்புப் பற்றி எரிவதைக் காணத் தக்க அளவு அருகாமையில், நேச நாட்டுப் படைகள் நெருங்கி வந்து விட்டன.

கார்சிகா தீவின் மூன்றில் இரண்டு பங்கு பிரஞ்சுக்காரர்கள் வசமானது.

சியாஸோ என்னுமிடத்தில் இத்தாலிக்கும் சுவித்சர்லந்திற்கும் இடையிலுள்ள எல்லைப்புரப் பாதையை ஜெர்மன் அதிகாரிகள் மூடிவிட்டார்கள்.

இன்று பிரபுக்கள் சபையில் விவாதம் நடந்தபோது இத்தாலியக் கப்பற் படையின் நிலைமையைக் குறித்து வைகௌண்ட் க்ரான்போர்ன் கூறினார்.

செப்டெம்பர் 24.—நேசநாட்டுப் படைகள், அல்தமுரா, மாதரா, ஒனிவெட்டா, சிப்ரா ஆகிய ஊர்களைக் கைப்பற்றினார்கள்.

ஐந்தாம்படை தலைமைக் காரியாலயத்தில் ஜெனரல் மண்ட்காமரியும், ஜெனரல் மார்க் கிளார்க்கும் சந்தித்தனர்.

நேப்பிள்ஸ் நகரம் பூரண குழப்பமா யிருக்கிறது.

அமெரிக்கக் கப்பல் படைத் தளங்களுக்கு, இத்தாலியக் கப்பல் படைத் தலைவர் டிபொல்லோன் தன் 41 போர்க் கப்பல்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தார். இத்தாலியக் கப்பற் படையைச் சேர்ந்த கப்பல்களில் இது வரை நேசநாடுகளோடு போய்ச் சேரா திருந்தவை இவை தான்.

செப்டெம்பர் 25.—மால்பெட்டா கைப்பற்றப்பட்டது. சலெர்னோவிற்கு வடக்கே மகா கடுமையான போராட்டம் நடைபெற்றது. எதிரிகள் எவ்வளவோ கடுமையாகப் போராடியுங் கூட, ஐந்தாம் படையும் எட்டாம் படையும் ஒரே அளவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

செப்டெம்பர் 26.—நேபில்ஸுக்குப் போகும் ரஸ்தா அடைபட்டு விட்டது. ஸ்பினெஸோலா, அதெல்லா ஆகிய பட்டணங்கள் கைப்பற்றப் பட்டன. ஜெர்மனியிலுள்ள காவா என்னு மிடமும் கைப்பற்றப்பட்டது.

போகியாவிற்கு 25 மைல் தூரத்திலுள்ள சமவெளிக்கு எட்டாம் படை வந்து சேர்ந்திருக்கிறது. ஜெர்மன் விமானப் படை இதை விட்டு எற்கெனவே காலி செய்து விட்டது. போக்கு வரவிற்கு மத்திய ஸ்தானமாயிருந்த பொல்லானோ மீது கடுமையாக வெடி குண்டுகள் வீசப்பட்டன.

இத்தாலியப் படைகளுக்கு முசோலினி புதிய தோர் வேண்டுகோள் விடுத்தார்.

கார்சிகாவிலுள்ள பாஸ்டியா, ஆல்மெட்டோ, வல்லதல்லி, என்னு மிடங்கள் கைப்பற்றப்பட்டன.

பரஸ்பர கடனுதவி தற்காலிகமாகச் செய்து கொள்ளுவது பற்றி, அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்டின் பிரதிநிதியாக வட ஆப்பிரிக்காவிலிருக்கும் மிஸ்டர் ராபெர்ட் மர்பியும், பிரஞ்சு தேசியக் கமிட்டியின் சார்பாக ஈன்மானெட்டும், எம். எம். ரனேமெசாக்லியும் ஒப்பந்தம் செய்துகொண்டு அதில் கையெழுத்திட்டார்கள்.

செப்டெம்பர் 27.—செரிக்னோலாவையும் முரோவையும் எட்டாம் படை கைப்பற்றியது. கலிப்ரிட்ஸ், காசனோ இவ்விரண்டிடங்களிலும் 5-ம் படை புகுந்து விட்டது. ஜெர்மானியர்கள் 12 மைல்களுக்கப்பால் விரட்டப் பட்டனர். 224 அச்சுப் போர் விமானங்கள் கைப்பற்றப்பட்டன.

இத்தாலியர்கள் திரண்டு வந்து ப்ரென்னென் கணவாயைத் தாக்குகிறார்கள்.

இத்தாலிய மன்னர், இளவரசர் உம்பெர்டோ, மார்ஷல் படாக்லியோ, அவர்களுடைய அரசாங்க அங்கத்தினர்கள் ஆகியோர் தென் இத்தாலியப் பட்டண மொன்றில் தங்கள் தலைநகரத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கார்சிகாவிலுள்ள சிசனேக்கியா என்னும் இடத்தை ஜெர்மானியர்கள் காலி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எற்பட்டது. கார்சிக்காவுக்கு அப்பால் 10 ஜெர்மன் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

செப்டெம்பர் 28.—போகியா, வினேசா, ரெல்பி ஆகிய இடங்களை நேசநாட்டுப் படைகள் கைப்பற்றின. யுத்த தந்திர முறைப்படி பார்த்தால் போகியாவைக் கைப்பற்றியது மிகவும் இன்பகரமானதென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார். தென் இத்தாலியில் ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள் கடுமையாக நெருக்கிக்கொண்டு வருகின்றன.

சைராஸ், கஸ்தியாலி பெடியடா என்னுமிடங்களை பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கின. எதிரி வெடிகுண்டு விமானங்கள் காஸ், லாரெஸ் என்னுமிடங்களைத் தாக்கின.

ஜெனரல் எய்சினோவரை மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்த்துவதற்கு அமெரிக்க செனட் சபையின் அனுமதியை மிஸ்டர் ரூஸ்வெல்ட் கோரினார்.

ஜெர்மனி ஜப்பான், ருமேனியா, பல்கேரியா, க்ரோஷியா, ஸ்லோவேகியா ஆகிய அரசாங்கங்கள் முஸோலினியின் புதியகுடியாட்சி அரசாங்கத்தை அங்கீகரித்துக்கொண்டன.

விஷி, எதேச்சை பிரான்சு, ஜெர்மானியர் வயப்பட்ட நாடுகள்

செப்டெம்பர் 24.—கலாய்க்கும் டன்கர்க்குக்கும் இடையிலுள்ள கடற்கரை தாக்கப்பட்டது. நாந்திஸ், போவாய்ஸ்தில்லி, டாமர்ஸ்டாட், ஆச்சென் ஆகிய இடங்களை நேசநாட்டு விமானங்கள் வெடி குண்டுகளால் தாக்கின.

ட்ரீஸ்ட் துறைமுகத்தைக் காப்பாற்றும்பொருட்டு, ஸ்லோவீன திடீர் படைகள் போராடின. யூகோஸ்லேவியா, மாண்டி நீக்ரோ, வட அல்பேனியா ஆகிய நாடுகளில் ஜெர்மானியர்களை மேலும் துன்பப்படுத்தி, அவர்களோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மான்சியர் ஹெரியட் இறந்துபோனதாக அறிவிக்கப்படுகிறது.

செப்டெம்பர் 25.—செண்ட் உமாரிலுள்ள விமான தளங்களை அமெரிக்க பாம்பர் விமானங்கள் தாக்கின.

பாரிசிலுள்ள ஜெர்மன் படைத் தலைமை உத்தியோகஸ்தர்களை ஆர்லியான்சுக்கு மாற்றி விட்டார்கள்.

நேசநாட்டுத் தலைமையில் 1,80,000 பேர்களைக் கொண்ட படைகள் யுகோஸ்லேவியாவில் தயாராகி ஜெர்மானியப் படைகளோடும் அவற்றை சேர்ந்த மற்ற படைகளோடும் போராடுவதற்கான முயற்சிகள் நடை பெறுகின்றன.

அங்காராவிலுள்ள பிரிட்டிஷ், அமெரிக்க, சோவியத் அரசாங்கங்களின் பிரதிநிதிகளிடம் சமரசம் செய்து கொள்ளுவதைக் குறித்து ருமேனியர்கள் முயற்சித்ததாகச் சொல்லப்படுகிறது.

செப்டெம்பர் 26.—பல இடங்களில் ஜெர்மன் படைகளுக்கும் யுகோஸ்லேவ் சுதந்தர வீரர்களுக்கும் கடுமையாகப் போர் நடந்ததாக அறிவிக்கப்படுகிறது.

பல்கேரியாவில் ஜெர்மானியர்கள் தம் ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொண்டார்கள். சோபியாவிலிருந்த ஜெர்மன் மந்திரி தான் உண்மையிலேயே அங்கு ஆட்சி நடத்துகிறார்.

செப்டெம்பர் 27.—பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த 'மஸ்கிடோ' விமானங்கள் ரைன்லாந்தைத் தாக்கின.

ஆல்டன் ஜோர்ட் என்னுமிடத்திலிருந்த 3 பெரிய ஜெர்மன் கப்பல்கள் 5-ம் படையினரால் நாசஞ் செய்யப் பட்டன.

செப்டெம்பர் 28.—லவால் ஏறிச் சென்ற மோட்டார் காரில் மகா கெட்டிக்காரத் தனமாக ஒரு வெடி குண்டு வைக்கப்பட்டிருந்த தென்றும், அதினின்று அவர் தப்பிக் கொண்டா ரென்றும், சூரிச் செய்தி கூறுகிறது.

கீழக்கோடி நாடுகள்

செப்டெம்பர் 23.—வடக்கு நியூ கினியிலுள்ள பிஞ்சேவன் என்னும் ஜப்பானியக் கப்பல் தளத்தில், நேசநாட்டுப் படைகள் போய் இறங்கி விட்டன. கில்பர்ட் தீவுகளைத் தாக்கும்போது, நான்கு எதிரி தளங்கள் வெடிகுண்டுகளுக்கு இரையாயின. தாரவா, ரேகின், அபமமா, நாரு ஆகிய கேந்திர ஸ்தானங்கள் தான் தாக்கப்படவேண்டியவை.

குடால்கனாரிலுள்ள ஸ்தாபனங்களை ஜப்பானிய விமானங்கள் தாக்கின.

ஜெனரல் டோஜோ செய்த தோர் வானொலிப் பிரசங்கத்தில், உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் உள்ள மகா நெருக்கடியான நிலைமையையும், தாம் மேற்கொண்டிருக்கும் காரியத்தினால் எவ்வளவு கஷ்டங்கள் உண்டு, என்பதையும் ஜப்பானிய மக்கள் அனைவரும் உணர வேண்டுமென்று கூறினார்.

செப்டெம்பர் 24.—பிஞ்சேவன் பூரணமாகக் கைப்பற்றப்பட்டது.

செப்டெம்பர் 25.—நேசநாட்டுப் படைகள் பூமி ஆற்றைக் கடந்து பிஞ்சேவன் தளத்தைச் சேர்ந்த விமான தளத்திற்கும் சப்ளை டிப்போவுக்கும் முக்கால் மைல் தூரத்தில் இருக்கின்றன.

2,000 டன் எதிரி சாமான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

செப்டெம்பர் 28—வேவக்கைத் தாக்கிய போது 7 ஜப்பானியக் கப்பல்களும் அநேகம் படகுகளும் மூழ்கடிக்கப்பட்டன.

வடமேற்கு ஆஸ்திரேலியாவை ஜப்பானிய விமானங்கள் தாக்கின.

ஜப்பானியர்களுக்கு விரோதமாக ஜெனரல் மெக்கார்தர் கையாளும் யுத்த தந்திர முறைகளை பரிபூரணமாக அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் ஆதரித்தார்.

ஜெனரல் மெக்கார்த்தருடைய பதவியிலோ, அதிகாரத்திலோ எந்த விதமான மாறுதலும் எற்பட்டிருப்பதாகத் தனக்குத் தெரியா தென்று ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி மிஸ்டர் ஜான் கர்டின்ஸ் பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.